திராவிடநாடு

கேட்டீரா! சேதி!

கடந்த நூற்றாண்டில் 1200க்கு மேற்பட்ட விதவைகள், குஜராத்தியில், சமூகத் தடைகளை உடைத்தெறிந்து மறுமணம் செய்துகொண்டுள்ளார்களாம். இத் தகவலை 'குஜராத் சன்சார் சுதார மண்டல்' தலைவரான கதுபாய் துருவ், அறிவித்துள்ளார். குஜராத்தில் நூறு ஆண்டுகளுக்கு முன்பு மறு மணச் சட்டம் இயற்றப்பட்டது.

*

1954-55 ஆண்டில் மட்டும் டில்லி சர்க்காரின் தபால் தந்தி இலாகாவில் 56 தடவைகள் பண ஊழல் செய்யப்பட்டிருப்பதாக, தணிக்கைக் கமிட்டி அறிவித்துள்ளது. இதன்படி மொத்தம் 7½ இலட்சம் ரூபாய்கள், வரிப் பணத்திலிருந்து கரியாகியுள்ளதாம். இதற்கு, இலாகாவின் அதிகாரிகளே காரணமாம். 7½ லட்சம் ரூபாய்! ஒரு ஆண்டில்!!

*

ராஜ்ய சீரமைப்புக் கமிஷன் சம்பந்தமாக மொத்தம் 10,22,263 ரூபாய் செலவிடப்பட்டிருப்பதாக, டில்லி மந்திரி தத்தார், பார்லிமெண்டில் அறிவித்துள்ளார். அக்கமிஷனில் அங்கம் வகித்த பாசல் அலிக்கு ரூ. 9345, சர்தார் பணிக்கருக்கு ரூ. 11546 டாக்டர் குன்ஸ் ரூவுக்கு ரூ 5046 அளிக்கப்பட்டதாம். இது தவிர, சிப்பந்திகள், அது இது என்று ஆனதே மேற்படிச் செலவின் விபரமாகும். பத்து இலட்சத்துக்கு மேல் செலவிடப்பட்ட இக் கமிஷனின் யோசனைகள் அனைத்தும நேருவால் ஏற்றுக் கொள்ளப்பட்டதா என்றால் இல்லை. மாறாக, மாற்றங்களும் திருத்தங்களும், மனக் கசப்பும், 'மராட்டியமும்' நாடு முழுமையும் உள்ளன. இதற்கு ஆன செலவு ரூ பத்து லட்சம்! நாம் செலுத்திய வரிப்பணந்தான் இதுவும்!!

*

காஷ்மீரத்தில் வேலையில்லாத் திண்டாட்டம் அறவே ஒழிக்கப்பட்டிருப்பதோடு அங்குள்ள தொழிலாளர் தம வாழ்க்கையும் உயர்ந்திருப்பதாகக் கேள்விப்பட்டுதாம் மிகவும் ஆனந்தப்படுவதாக நேரு தெரிவித்துள்ளார் 30-ந் தேதி! இவ்வளவு பெரிய இந்தியாவால் சாதிக்க முடியாதது, காஷ்மீரத்தால் எப்படி முடிந்தது? காஷ்மீரம் இந்தியாவுடன் இணைந்திருப்பதாகப் பேசப்பட்டாலும, அது தன்னிச்சையாகச் சில காரியங்களைச் செய்யும் அதிகாரத்தை அனுபவித்து வருகிறது! இந்திய யூனியனிலிருக்கும் யாரும், காஷ்மீரத்துக்குள் நுழைந்துவிட முடியாது. இத்தனை சலுகைகளோடும் உள்ள காஷ்மீரம சின்னஞ்சிறு பூபாகம். அதனால்தான, காரியங்களைச் செவ்வனே செய்ய முடிகிறது! ஆனந்தமடைந்த பண்டித நேரு இந்த உண்மையை ஒரு கணம் சிந்தித்தால், நாம் திராவிட நாடு கேட்பதில் பொதிந்துள்ள வேட்கையினை உணரலாம். தனி நாடுக் கொள்கையையும் அனுமதிக்கலாம். அந்த இடந்தானே, பூஜ்யமாக உளளது.

*

தமிழ் நாடு காங்கிரஸ் வரப்போகிற தேர்தலில் வேலை செய்வதற்காக ஒவ்வொரு இடத்துக்கும உதவ 14 ஜீப் கார்களை வாங்கப்போகிறதாம. இதில் ஏறிக்கொண்டு, அந்தந்த இடத்து காஙகிரஸ்'பிரமுகர்'கள். வேலை செய்யப்போகிறார்களாம் என்ன வேலை செய்வார்கள் என்பதுதான் உங்களுக்கே புரியுமே.

*

தனிப்பட்ட கம்பெனிகளால் நடத்தப்பட்டு வரும் கோலார் தங்கச் சுரங்கங்களின் பொறுப்பு அநேகமாக மைசூர் அரசாங்கத்தின் வசம் வருவது உறுதியெனத் தெரிகிறது. இது சம்பந்தமாக, டில்லி தனது அனுமதியை அளித்துள்ளதாம. நஷ்டஈட்டுத் தொகையாக 119 லட்சம் கம்பெனிகளுக்குக் கொடுக்கலாம் என்றும் டில்லி அறிவித்துள்ளதாம்!

*

"வெள்ளையர்களின் நிறபேதக் கொள்கையைக் கண்டித்து, இந்தியாவில் பேசப்படுகிறது. நிறபேதம் காட்டுவது தவறுதான். ஆனால், இந்தியாவிலும் அரிஜனஙகள் என்பவர்கள் எப்படி நடத்தப்படுகிறார்கள்? மேல் சாதிக்காரர்கள் கிணற்றில் தண்ணீர் கூட இழுக்கக் கூடாதாமே அரிஜனங்கள் என்போர்" என்பதாக அமெரிக்காவிலிருக்கும் கலிபோர்னியா பல்கலைக்கழகத்தைச் சார்ந்த சரிதப் பேராசிரியர் டாக்டர் கார்ல் பிரிடென்பாக்என்பார், கேலிசெய்துள்ளார். ஆகஸ்டு முதல் தேதி, சென்னை கன்னிமாராவில் பேசும்போது இவவண்ணம் குறிப்பிட்டுள்ளார் ஊருக்கு உபதேசம் செய்யும் 'இந்து' முதலிய ஏடுகள் என்ன பதில் சொல்லுமோ, இவரது கூற்றுக்கு?

*

கிழக்குப் பாகிஸ்தான் சர்க்கார். கடற்கரையோரமுள்ள நஞ்செய் நிலங்களைச் சுற்றி, பாதுகாப்புக் கரை போடுவதென்று முடிவு செய்து அதற்காக ரூ. 50 லட்சம் ஒதுக்கிளளது. கடல்நீர் புகுந்து அடிக்கடி நஞ்செய் நிலங்களை அழிப்பதைத் தடுக்கவே இந்த ஏற்பாடாம்! இங்குமதான் குமரி போன்ற இடங்களில் கடல் அரிப்பு ஏற்படுவதாக அடிக்கடி செய்திகள் வருகின்றன. பாகிஸ்தானைப் போல, ஏதாவது ஏற்பாடு செய்தால் நல்லதுதான். செய்யப்படவில்லையே!

*

ஆண்டுச் சந்தா ரூ. 7

மலர் 15 :: இதழ் 5
5 – 8 – 56

K. Srinivasan, 3-C, Station Road, Chidambaram.

சூயஸ்

பாரிஸ் பதைக்கிறது; இலண்டனில் இதயத் துடிப்பு ஏற்படுகிறது; நியூயார்க் புருவத்தை நெறிக்கிறது; மாஸ்கோவில் முகமலர்ச்சி; பீகிங்கில் பேரானந்தம்; வழக்கம்போல் டில்லி சிந்திக்கிறது! ஆனல் உலகத் தலைநகர்களிலே தலைவர்கள் கூடிக்கூடிப் பேசுவதும், மக்கள்-திடுக்கிட்ட நிலையில் பேசுவதும், "சூயஸ்! சூயஸ்!" என்பதுபற்றியேயாகும்.

கொள்ளை கொள்ளையாகப் பவுன்களைக் கொட்டியல்லவா, வெட்டினேம், என்று கூறிக் கதறுகின்றன, வெள்ளை வல்லரசுகள்.

இலட்சத்துக்கு மேற்பட்ட எகிப்தியரின் பிணத்தின்மீது கட்டப்பட்டதல்லவா சூயஸ் என்று கோபத்துடன் கேட்கிறுர் நாசர்.

பணம் போட்டுப் பங்கு வாங்கி அல்லவா, சூயஸ் கம்பெனியை நடத்துகிறேம்-உலக நன்மைக்காக,—என்று கேட்டு, உருகவைக்க எண்ணுகிறது வெள்ளை வல்லரசுக் குழு.

சுளையை விழுங்கிவிட்டுத் தோலை எம் முன்னர் வீசிடும் உங்கள் சூது எமக்குத் தெரியுமய்யா, துரைமார்களே, கடையைக் கட்டுங்கள், பங்குகட்கான காசு வீசி எறியப்படும்; எடுத்துச் செல்லுங்கள் என்று எக்காளமிடுகிறுர், நாசர்.

உலகக் கப்பல் போக்கு வரத்து என்ன கதியாவது, என்று சீறிக் கேட்கின்றன, வல்லரசுகள்.

அந்தப் பொறுப்பு எமக்குத் தெரியும், குறைவற நிறைவேற்றுவோம், கவலை வேண்டாம் என்று கூறுகிறுர் நாசர்.

சூயஸ், சர்வதேசப் பொறுப்பு என்று அரசியல் பேசுகின்றன, வல்லரசுகள்.

சூயஸ், எகிப்து நாட்டு உடைமை. அதன் உரிமை, எமக்கே, என்று முழக்கமிடுகிறுர் நாசர்.

போர்க் கப்பல்கள் உண்டு, என்று மிரட்டுகிறது பிரிட்டன்.

போர்க்கோலம் பூண்டுவிட்டது எகிப்து என்று பரணி பாடுகிறுர், நாசர்.

சூயஸ், உலகெங்கும், அரசுத் தலைவர்கள் உள்ளத்தில் சூருவளியைக் கிளப்பி விட்டது. பேச்சுடன் முடியுமா, பெரும் போராய் எழுந்திடுமா, என்று கலக்கத்துடன் மக்கள் எண்ணிடவேண்டிய நிலையை சூயஸ் உண்டாக்கிவிட்டது.

சூயஸ், நிபுணர்களால் நிர்மாணிக்கப்பட்டது, நிபுணர்களால் மட்டுமே நிர்வகிக்கப்பட முடியும் என்று பேசி, நிலைமையைச் சமாளிக்க முயல்கிறது வெள்ளை ஆதிக்கம்.

சூயசின் நிர்வாகத்தைக் கவனித்துக்கொள்ளும் திறம் எம்மிடம் நிரம்ப உண்டு என்று மார்தட்டிக் கூறுகிறுர் நாசர்.

சூயஸ் வீரர், நாசர் வாழ்க; என்று எகிப்தியர் எக்காளமிடுகின்றனர்.

சூயஸ் சர்வாதிகாரி சமருக்கு வழி கோலுகிறுர் என்று வம்பு பேசுகின்றன வெள்ளை வல்லரசுகள்.

பார்லிமெண்டிலே, சட்டசபைகளிலே, பாசறைகளிலே, கலங்களிலே எங்கும் இன்று சூயஸ்பற்றியே பேச்சு.

சூயஸ் வரலாறு, சுவைமிக்கது—அதன் எதிர்காலம் எப்படி இருக்கும் என்பதைப் பொறுத்து, உலக நிலைமையே இருக்கிறது.

உலகெங்கும் பீதியை மூட்டிவிட்ட பிரச்சினையாக உள்ள இந்த சூயஸ், 101 மைல் நீளமுள்ளது தான், ஆனல் இந்த வழி கிடைத்த காரணத்தால், ஐரோப்பாவிலிருந்து இந்தியாவுக்கு வருகிற கடற் பயணத்தில் 4000-மைல் குறைகிறது. வியாபாரத் துறையிலே இதனல் கிடைக்கும் பலன்மட்டுமல்ல, இராணுவ முக்கியத்துவத்தையும், சூயசின் அமைப்பே காட்டும்.

பதினேரு மணி நேரம் பயணம், சூயசில், இதனல் 4000-மைல் பயணம் குறைகிறது.

எகிப்து எழிலரசாக இருந்த நாட்களிலேயே, சூயஸ் கால்வாய் விஞ்ஞான வசதியற்ற நிலையிலேயே ஓரளவுக்கு வெட்டி வைக்கப்பட்டு, சிற்சில சமயம் பயன்பட்டு, இடையிடையே தூர்க்கப்பட்டுப் போய் விட்டது.

பிரன்ச்சு நாட்டுப் பேரறிவாளர், அரசியல் நிர்வாகத் துறையினர், பெர்டினண்டு-டி-லெசப்ஸ் என்பவர், சூயஸ் கால்வாய் வெட்டுவதற்கான திட்டம் தயாரித்தார்.

அப்போதைய எகிப்து அரசாள்வோராக இருந்த ஸையத்பாஷாவிடம் சலுகைபெற்று, ஒப்பந்தம் செய்துகொண்டு, சூயஸ் திட்டம் நிறைவேற்றினர்.

1854ல், லெசப்சுக்கும் சையத் பாஷாவுக்கும், ஏற்பட்ட ஒப்பந்தத்தின்படி 99 வருஷங்கள், சூயஸ் கால்வாய் கம்பெனியின் நிர்வாக உரிமை, பங்குதாரர்களின் குழுவிடம் இருக்கும்.

1854, நவம்பர் 30ல் ஒப்பந்தம் ஏற்பட்டது. அப்போது எகிப்து, துருக்கி சாம்ராஜ்யத்திலே ஓர் அரசு, எனவே சையது பாஷா செய்துகொண்ட ஒப்பந்தத்தை அனுமதிக்கும் உரிமை துருக்கிக்கு இருந்தது.

1866, மார்ச்சு 19ல் துருக்கியும் ஒப்பந்தம் செய்துகொண்டது.

99 ஆண்டுகளுக்குப் பிறகு, சூயஸ், எகிப்து நிர்வாகத்தில் தரப்படவேண்டும் என்பது ஒப்பந்தம்; அதன்படி சூயஸ் கம்பெனி, 1968, நவம்பர் 17ல் எகிப்துக்குக் கிடைக்கும்.

ஆனால் நாசர் இப்போதே கம்பெனி நிர்வாகத்தைக் கைப்பற்றிக் கொண்டு விட்டார்.

சட்ட விரோதம் என்கின்றன வெள்ளை வல்லரசுகள் — சர்வதேச வழக்கு மன்றம் செல்வோம் என்கின்றனர், "தாராளமாக, அங்கு உங்களைச் சந்திக்கிறேன்" என்று நம்பிக்கையுடன் கூறுகிறார் நாசர்.

பல வெள்ளை வல்லரசுகளுக்கும், சூயஸ் கம்பெனி விஷயமாக ஆதிக்க அக்கரை இருக்கிறது என்ற போதிலும், கம்பெனி பங்குகளில், மிகப் பெரும் பகுதி, பிரிட்டனிடம் இருக்கிறது; அதுமட்டுமின்றி, உதுமானிய சாம்ராஜ்யம் உருக்குலைந்து போனதால், மத்திய கிழக்கு ஆசியாவில் ஏற்பட்ட குழப்பத்தை வாய்ப்பாக்கிக் கொண்டு, பிரிட்டன், தன் பிடியைப் பலப்படுத்திக்கொண்டு விட்டது. இன்று சூயஸ் கால்வாயின் எஜமானனாக பிரிட்டனே பெரிதும் இருக்கிறது என்று கூறலாம், எனவேதான், பிரச்சினை, எகிப்துக்கும்—பிரிட்டனுக்கும் என்று எண்ணிட வேண்டிய நிலையில் இருக்கிறது.

பிரிட்டன், சூயஸ் கால்வாய் வெட்டியதிலே அக்கரையும் காட்டியதில்லை.

சூயஸ் அமைப்புக்குக் காரணமாக இருந்தது, லெசப்ஸ்-அவர் பிரன்ச்சுக்காரர்.

அவர் ஏட்டில் தீட்டியதை இரத்தம் கொட்டி, உருவாக்கியதற்கான உழைப்பும், உயிர்ப்பலியும் எகிப்தியருடையது.

இதற்கான பெரும் பணம் பல நாடுகளிலே, பங்குகளாக வசூலிக்கப்பட்டது.

எகிப்து பாதுஷாவாக இருந்தவர், குறிப்பிடத் தக்க அளவு பங்குகள் பெற்றுத்தான் இருந்தார் - ஆனால் ஊதாரித்தனத்தால் பணத்தை இழந்து, கடனாளியானார் — அந்தச் சமயமாகப் பார்த்து, அவரிடமிருந்து பங்குகளைப் பிரிட்டன் விலைக்குவாங்கி 'பெரிய' எஜமானாகிவிட்டது.

நாசர், இந்தச் சம்பவத்தை, ஏமாளியை எத்தன் கெடுத்த காதை என்று கூறுவதிலே தவறேதுமில்லை.

சூயஸ் மூலம் கிடைக்கும் வருவாயில, மி மிகச் சிறு பகுதியே, எகிப்து சர்க்காருக்குக் கிடைக்கிறது.

சுரண்டிக் கொழுக்கிறார்கள், எகிப்தியர் சுருண்டு வீழ்கிறார்கள் பட்டினியால் என்கிறார், நாசர்.

எகிப்துக்குப் புது வாழ்வு தரத்தக்க **அசுவான் அணை** கட்டுவதற்கு, கடன் வசதி தருவதாக ஆசை வார்த்தை கூறிய பிரிட்டன், காரணம் ஏதேதோ காட்டிக் கைவிரித்தது; அமெரிக்காவும் அந்தப் போக்கைக் கடைப்பிடித்தது. கடுங்கோபம் கொண்டார் நாசர் — கண் எதிரே தெரிந்தது — சூயஸ் கம்பெனி; தேசஉடமையாக்கிவிட்டேன் என்றார், உலகு கிடுகிடுக்கிறது.

முகப்பில், சூயஸ் வெட்டி அமைத்த லெசப்சும்,

கடனாளியான பாதுஷாவிடம் பணமூட்டை கொடுத்து, சூயஸ் கம்பெனி பங்குகளைத் தட்டிப் பறித்துக் கொண்ட பிரிட்டிஷ் சூட்சிக் காட்சியும்,

சூயஸ் கால்வாய் கம்பெனிக் காரியாலயமும், இவைகளுக்கு நடுவிலே, புரட்சிகரமான போக்கைப் புன்னகையுடன் மேற்கொண்டுள்ள நாசரும், காண்கிறீர்கள்.

ஒட்டகம், தாக்கக் கிளம்புகிறது. சிங்கம், இளைத்து, எழுந்திருக்கவும் சக்தியற்றுப் படுத்துக் கிடக்கிறது.

சூயஸ், பிரச்சினை, வேறு என்னென்ன காட்சிகளை உருவாக்குமோ என்பது இன்றைய கவலையாகி விட்டிருக்கிறது.

★

முசாதிக்

ஈரான் நாட்டு முன்னாள் முதலமைச்சர் முதுபெருங்கிழவர் முசாதிக், இந்த ஞாயிற்றுக்கிழமை, சிறையினின்றும் விடுதலை அடைகிறார் என்று அறிய அகமகிழ்கிறோம்.

முசாதிக்குக்கு, எண்பது வயதாகிறதாம்—மூன்றாண்டு கடுங்காவல் தண்டனையில் உழன்றுவிட்டு, ஞாயிறன்று விடுதலை அடைகிறார்.

ஆங்கில ஆதிக்கத்தில் இருந்து வந்த 'அபடான் எண்ணெய்த் தொழிலை' ஈரானின் தேசீய உடைமையாக்கிய அஞ்சாநெஞ்சர் இந்த முதியவர்.

நாசர், இன்று சூயஸ் பிரச்சினையில் காட்டும் போக்குக்கு, முன் மாதிரியாக அமைந்தது, இந்தச் சம்பவம்.

பிரிட்டன் போர்க் கப்பல்களை அனுப்பிற்று—உலகிலே பல வல்லரசுகள் மிரட்டின—முதியவர் கலங்கவில்லை.

ஈரான் ஷாவின் எதிர்ப்பே கிளம்பிற்று, சட்டை செய்தாரில்லை.

சர்வதேச வழக்கு மன்றத்தில் அழைத்தனர், முசாதிக் நேரில் சென்று, வழக்கில் வாதாடி வெற்றிபெற்றார்.

ஆனால், ஏகாதிபத்தியம், அவருடைய செல்வாக்கைச் சிதைத்திட சூழ்ச்சி பல செய்தது.

நாட்டைவிட்டு விரண்டோடிய ஷா, புதிய பலம் பெற்றுத் திரும்பினார்.

எதிர்ப்புத் தீ கிளப்பிவிடப்பட்டது முசாதிக்மீது.

தூக்கிலே போடுவர் என்றனர்—கடைசியில், ஷா, மூன்றாண்டு தண்டனை தந்தார்.

விடுதலை அடைந்ததும், முசாதிக் நாடு கடத்தப்படலாம், என்கிறார்கள்.

கொடுமை இந்த அளவு செல்வதை உலகம் ஒப்பாது.

எதனையும் தாங்கும் இதயம் கொண்ட முசாதிக், தாயகத்தில் வாழ்ந்து தம் பேரார்வத்தையும் பேரறிவினையும் தந்துதவ வாய்ப்பளிப்பதே, அறமாகும்.

முதுகிழவர் முசாதிக்கின் விடுதலை கேட்டு மகிழ்கிறோம். ★

காஞ்சீபுரம்

5—8—'56

தம்பி !

அடித்தாலும், அணைத்தாலும், ஐய, நின் அன்பெனும் பாசமது அறிந்துருகும்
என்னொத்த அடியவர்கள் இங்குண்டு அதனால் மின்னொத்த இடை உமையாள், கண்பொத்த
பொன்னொத்த மேனியனும், பொடிபூசி பண்ணொத்த மொழிகேட்டு இன்புற்று,
மண்விட்டு விண் வரட்டும் என்றே நிற்கும் மாமணியே! நின் நோக்கம் அறிந்தேனன்றே!
மற்றையோர் உற்றதுறை பற்றித்தாக்க இதுமுறையோ? இது அறமோ? என்றே கேட்பர்
கற்றைச் சடையதனில் மதிசூடிக் காட்டும் தேவ! உற்றதுறை உண்டெனினும் உள்ளம் நோகேன்
ஊர்தோறும் உன்புகழைப் பாடிச் செல்வேன், காரழகுமிகுந்திடு நந்தம் நாட்டில் கண்கசக்கி
கடிந்துரைப்போர் போக்கினரைக் கண்டால் காய்வேன்; கண்ணுதலைக் கொண்டவனை அறியாதானே!
பண்டுமுதல் அவன்கொண்ட முறை ஈதன்றே? தொண்டு செய்யும் தூயவரின் பெண்ணடைக் கேட்டான்
துடித்திடாது அறுத்திடுக மகவை என்றான், பெயர்த்தெடுத்த கண்ணினை அப்பிக்கொண்டே
பெம்மானும் இருந்த நிலை அறியாய் போலும்; அடித்தாலும், அணைத்தாலும் ஐயன், அன்றே
அவனடியை மறந்திடுதல் அடியார்க்குண்டோ! அணைத்தாலென், அடித்தாலென், வேறு வேறு?
அனைத்துமே அவனாற்றும் வினையேயன்றே? அரகரா மகதேவா! என்றேத்தித் தொழுவதன்றி
ஆகாது ஐயன் செயல் அடுக்காது, என்பார் உண்டோ? ஆன்றோர்கள் அளித்த நெறி ஈதேயன்றே
அறியாது போனதுமேன், அறிவற்றோனே! அடித்தாலும் அணைத்தாலும் அவனே ஐயன்!
அடிதொழாதிருந்திடுவார், அடையார் இன்பம்.

பத்து நாட்களுக்கு முன்பு நான் குன்றக்குடி மடத்துக்குச் சென்றிருந்தேனே, அங்கு யாரோ எனக்குப் பாடிக்காட்டிய பதிகம்போலும் என்று எண்ணிக்கொள்ளாதே, தம்பி, அடிகளாரின் அன்பழைப்புப் பெற்று மடம் சென்ற எனக்கு, சிறந்த உணவு, சுவைமிக்க உரையாடலுடன் சேர்த்தளிக்கப்பட்டது; பதிகம் தரப்படவில்லை.

மேலும், தம்பி, இது பதிகமும் அல்ல, பதிகம் போன்றது!

சமதர்மம் அல்ல, சமதர்மம் போன்றது, என்று ஆவடிப் பருவத்தின்போது பேசிக்கொண்டார்களே அதுபோல, என்று வைத்துக்கொள்ளேன்!

பதிகம் — முறைப்படி, ஒருவர் என்னிடம் பாடிக் காட்டியதுண்டு. இலக்கண முறைப்படி அவர் தந்த பதிகத்தை, நினைவிற்கு வந்த வடிவத்தில் தந்துள்ளேன்— பொருட் குற்றம் இடையாது — வடிவம் புலவர்களால் திருத்தி அமைக்கப்பட வேண்டியதாக இருப்பதை உணருகிறேன். ஆனால் நான் உனக்குப் பதிகத்தின் வடிவம் காட்ட அல்ல இதனைத் தருவது; அதிலே உள்ள பொருளுக்கும் அதற்கும் இன்றைய அரசியல் நிகழ்ச்சிகளுக்கும் உள்ள வேடிக்கையான தொடர்பினைக் காட்டுவதற்குமேயாகும்.

பல நாட்களுக்கு முன்பாக நான் கேட்ட இந்தப் பதிகம் என் நினைவிற்கு வந்தது.

★ அடித்தாலும், அணைத்தாலும்.....! ★

அடித்தாலும் அணைத்தாலும், ஐயன், அடிதொழுவேன்—என்று பாடினார், யாரோ, பாவம், பக்தியில் கட்டுண்ட நிலையில்.

பெண்டுகேட்டான், பிள்ளைக்கறி கேட்டான், பேயாக அலையச்செய்தான்—எனினும் பெம்மான் செய்தது, எனவே, அவன் ஆற்றிய வினைக்குக் காரணம் அவனறிவான் என்றெண்ணி, அகமகிழ்ந்து அவனடி தொழுதேன் என்று கூறுவதுதான் ஆன்றோர் நெறி என்பதை எடுத்துக்காட்டும், பதிகமல்லவா: மறுபடியும் ஒரு தடவை, பார், தம்பி.

அக்ரமம், அநீதி நிலவிடக் காணும்போது, ஊர் கெடுப்பவன் உயர்ந்து உழைப்பவன் உருக்குலையும்போது, பொய்யனும் புரட்டனும் போக போக்கியத்தில் புரள, நெறி தவறாதான், அறம் பிறழாதான் வறுமைப் படுகுழியில் வீழ்ந்துழலும்போது, இந்தப் பதிகம் கூடப் பொருளற்றுப்போகிறது, கடவுள் நெறியில் நம்பிக்கை கொண்டவர்களுக்கே!

அடித்தாலும் அணைத்தாலும் ஐயனன்றோ, என்ற அமைதியைப் பெற முடிவதில்லை — அவர்களாலேயே.

அறநெறி தவறுவோனை அடித்திடவும், அவ்வழி தவறாதானை அணைத்திடவும் வேண்டுவதன்றோ ஐயன் முறையாக இருத்தல் வேண்டும் என்று இக்காலை, கேட்கின்றனர்.

அருள் விஷயமாகக் கூறப்படும் பதிகத்தின் கருத்தே ஆராய்ச்சி மிகுந்துள்ள இந்தக் காலத்தில், பொருளற்றதாகித் தெரிகிற போது, **அடித்தாலும் அணைத்தாலும் அவனே எமது ஐயன்** *என்று ஏத்தித் தொழுதிடும் போக்கு, அரசியலில் கொள்ளப்படுமானால், எப்படிப் பொருந்தும்.*

ஆனால், தம்பி, அனைவரும் இந்த ஆபத்தான நிலையில் தங்களைச் சிக்கவைத்துக் கொள்வதில்லை — ஒரு சிலர் தான்; மற்றையோர், ஐயன், அதாவது ஆள்பவர் எந்தப் போக்குடன் நடந்துகொள்கிறாரோ, அதனால் எத்தகைய பயன் விளைகிறதோ, அதற்கொப்பத்தான் அந்த ஆளவந்தாருக்கு ஆதரவு காட்டுவதோ, திருத்த முற்படுவதோ, அல்லது விரட்டப் போரிடுவதோ ஆகிய முறைகளை வகுத்துக்கொள்கிறார்கள்.

பட்டினிபோட்ட மகராஜன் பல்லாண்டு, பல்லாண்டு வாழ்க.

சோறு போட்டுச் சுவை யூட்டிய சூதுக்காரன் அடியோடு ஒழிக—*என்று எவரேனும் கூறுவரோ?*

அரசியலில், நேசமும் பாசமும், தொடர்பும் தொந்தமும் ஏற்பட்டு விடுவது சகஜம்—ஆனால், அது, நாம் மேற்கொண்டுள்ள காரியத்துக்கே உலைவைத்திடுவதாகவும், நமது நீண்ட கால உழைப்பின் உறு பலனையே கெடுத்தொழிப்பதாகவும் அமைந்துவிடுமானால், நாம் அந்தத் தொடர்புக்குக் கட்டுப்பட்டு, பதிகம் காட்டினேனே, அதிலே காணக் கிடப்பதுபோல, **அடித்தாலும் அணைத்தாலும் அவனே ஐயன்**: *என்று தீர்மானித்துக்கொள்வது.*

வடநாடு, தென்னாட்டின் மீது ஆதிக்கம்செலுத்துகிறதுஎன்பது நமக்குத் தெரிகிறது, நமது நெஞ்சில் தீயாகப் பாய்கிறது, நமது வலிவினைப் பெருக்கிகொண்டு, இந்த அக்ரமத்தை ஒழித்திட வேண்டும் என்ற நோக்குடன் வாய்ப்புக்கேற்ற வண்ணம் பணியாற்றுகிறோம்.

காமராஜர், வடநாடு, தென்னாடு என்று பிரித்துப் பேசுவதே பித்த முதிர்ச்சி—சித்தக் குழப்பம்—என்கிறார், இந்த நோக்கத்தைத் தமது அரசியல் நடவடிக்கைகளில் தவறாது காட்டுகிறார்.

வடநாட்டு ஆதிக்க ஒழிப்புக்கு நாம் கட்டுப்பட்டவர்கள்; காமராஜர் அந்தத் திட்டத்தை எதிர்த்திடுபவர்; இந்நிலையில், நமக்கும் காமராஜருக்கும் தொடர்பு எவ்வகையிலோ ஏற்பட்டு விடுகிறது என்றால், அது எந்த அளவோடு நிற்க வேண்டும், எந்த வகையில் வடிவம் கொள்ளவேண்டும்.

அடித்தாலும் அணைத்தாலும் அவனே என் ஐயன்!-என்ற அளவுக்கா செல்வது!

கூடையில் வைத்துச் சுமந்து கொண்டு போனாளாமே உத்தமி நளாயினி, அந்தப் போக்கின் அளவுக்குமா செல்ல வேண்டும்.

கூடாது! அது தீது! அது கொள்கைக்கு வெற்றி தாராது! தவறான போக்கு அது, ஆகாது—என்றெல்லாம் தம்பி! நீ கூறுகிறாய், கேட்கிறது; மகிழ்ச்சி ஊற்றெடுக்கிறது; ஆனால், மற்றோர் புறமிருந்து பதிகம் கேட்கிறதே! அடித்தாலும், அணைத்தாலும், அவரே எமது ஐயன்! — என்று! என்னென்கிறாய், இந்தப் போக்கினை. தம்பி, தம்பி, ஆராயச் சொல்கிறேன், அவர்களைப் போய் நீ கேட்டுவிடாதே நம்மீது மெத்தக் கோபம் கொண்டவர்கள்!

காமராஜர் நம்மவர், ஆகவே நல்லவர்.

காமராஜர் நல்லவர், ஆகவே நம்மவர்.

நாம், நம்மவர் என்பதற்காக மட்டும், காமராஜர் நல்லவர் என்று சபலம்கொள்ள மறுக்கிறோம்—வேறு சிலரோ, காமராஜர் நம்மவர். ஆகவே நல்லவர் என்று பாசம் காட்டுகிறார்கள், பதிகமே பாடுகிறார்கள், அடித்தாலும் அணைத்தாலும் அவரே எமது ஐயன்! — என்று.

எத்துணை பக்தி! என்று பதிகம் கேட்டுக் கூறிடுவதுபோலத்தான், ஆஹா! என்ன பாசம்! எத்துணை நேசம்! என்று கூறத் தோன்றுகிறதே தவிர, இதிலே பொருள் இருப்பதாக என்னால் உணர முடியவில்லை.

பக்தி மேலிட்டால் பதிகம் பாடுபவர் கூறுகிறாரல்லவா, அடித்தாலென் அணைத்தாலென் அனைத்தும் உன் வினையன்றோ என்று, அதுபோல காமராஜர், கிளர்ச்சிகளை அடக்காதிருந்தாலும் அழித்தொழிக்க முற்பட்டாலும் எல்லாம் நன்மைக்கே! என்றும், எப்படிச் செய்தாலும் அவர் நல்லவர் என்றும் கொள்ள என் மனம் இடம் தரவில்லை—வேறு சிலருக்கு எப்படி மனம் இடம் தருகிறது

(15-ம் பக்கம் பார்க்க)

அவர்கள் சந்தித்தால்!

நிருபர்:- டாக்டர் !என்ன உடம்புக்கு ? ஒரு மாதிரியாக இருக்கிறீர்.

டாக்டர் வரதராஜுலு:- ஒன்றுமில்லை— வெறும் அலுப்புத்தான், வேறென்ன?

நிருபர்:- அலுப்புக்குக் காரணம்? தேர்தல் பிரசாரத்துக்காக உம் நண்பர் மின்னல் வேகத்தில் சுற்றுப் பயணம் செய்கிறார் — அவருக்கு ஏற்படாத அலுப்பு, வெறுமனே வீட்டோடு விச்ராந்தியாக உட்கார்ந்து கொண்டிருக்கும் உமக்கு ஏன் வருகிறது?

டாக்டர்:- அட, போமய்யா! குத்திக் கிளறி, வாய் வார்த்தையைப் பிடுங்குவதிலே, அசகாய சூரராச்சே...... சொல்லாவிட்டால் விடவா போகிறீர்? வேறு ஏதேனும் கயிறு திரித்து விடுவீர்!

நிருபர்:- ராம, ராம! நான் பொய்யும் புனை சுருட்டும் எழுதுவது உண்டா? டாக்டர் வாட்டமாக இருக்கிறார், காரணம் கூற மறுக்கிறார், அவருடைய வாட்டத்துக்குக் காரணம் உடல் சம்பந்தப்பட்டதாகத் தெரியவில்லை — என்று மட்டும் தான் எழுதுவேன்! இல்லாததும் பொல்லாததும் எழுதுவேனா?

டாக்டர்:- இன்னும் என்ன எழுத வேண்டும்! இது போதுமே. ஆயிரம் சந்தேகங்களை அல்லவா இது கிளப்பிவிடும்.

நிருபர்:- விஷயத்துக்கு வருவோம் — டாக்டர், அலுப்புக்குக் காரணம், ...? அலுப்பாகக்கூடத் தெரியவில்லை... சோகம், ஏமாற்றம்... போலத் தெரிகிறது... நம்பிப் போன காரியம் ஜெயமடையாமற் போய்விட்டால் ஏற்படுமே, அது போன்ற சோகம்... ஏமாற்றம்...

டாக்டர்:- சரி, சரி, உமக்குத்தான் எந்த மூலையில் எது நடந்தாலும் தெரியுமே.

நிருபர்:- டாக்டர்! அதென்ன, மீரான் சாயபு தெரு, மூலையா! மவுண்ட் ரோடுக்கு சமமாச்சே!

டாக்டர்:- எமகாதகப் பேர்வழி. சரி, யார் என்ன கலகம் மூட்டினாலும், சமயத்தில் என் பேச்சைக் கேட்பவர், பழையகால நண்பர் என்ற நம்பிக்கையுடன் சென்றேன்— எவ்வளவோ எடுத்துச் சொன்னேன். என்ன காரணமோ தெரியவில்லை. ஒரே அடியாக முடியாது என்று கூறிவிட்டார்.

நிருபர்:- கொளுத்தியே தீருவது என்று முடிவு செய்துவிட்டார்!

டாக்டர்:- ஆமாம், இந்தச் சமயம் வேண்டாம்—எனக்காக விட்டுக் கொடுங்கள் என்று கெஞ்சிப் பார்த்தேன்...

நிருபர்:- எனக்கு முன்பே தெரியும்...

டாக்டர்:- என்ன தெரியும்? என் பேச்சுக்கு பெரியார் இணங்கமாட்டார் என்றா? அதெப்படி?

நிருபர்:- மரியாதைக்கு, அன்புக்கு, ஒரு தடவை உமது பேச்சைக் கேட்டார் ஒவ்வொரு தடவையும் அவருடைய திட்டத்தை, கைவிட்டுவிடும்படி, நீர் கேட்டுக்கொள்வீர் அவர், 'ஆகட்டும்' 'விட்டுவிடுகிறேன்' என்று தலை அசைப்பார் என்று எப்படி எதிர்பார்க்கலாம்.

டாக்டர்:- தேசீயக் கொடி எரிப்புத் திட்டத்தை, அவர் கைவிட்ட காரணம் தெரியுமல்லவா?

நிருபர்:- தெரியாமலென்ன, தங்களுடைய கீர்த்தி, அதனாலே, தேசீயக் கொடியைவிட உயர்ந்ததல்லவா, தெரிந்தது!

டாக்டர்:- எவ்வளவு சுற்றுப் பயணம் நடத்தி, பெயர்ப் பட்டியல் வெளியிட்டு, கொடி கொளுத்தத் தயாராக இருந்தார் தெரியுமோ? வேண்டாம் — என் பேச்சைக் கேளுங்கள் என்றேன், சரி என்றார்.

நிருபர்:- அதுபோலத்தான் இந்த முறையும் நடக்கும் என்று எதிர்பார்த்தீர். பலர் எண்ணிக் கொண்டனர், எனக்கு மட்டும் நம்பிக்கை இல்லை.

டாக்டர்:- அதென்னய்யா அப்படி?

நிருபர்:- எல்லாம், உங்களோட முறை தவறு என்பதால்தான்? அவர் தான் ராமர் படம் எரிக்கப்படும் என்று விளக்கமாகப் பல நாட்களுக்கு முன்பே, பட்டவர்த்தனமாக அறிக்கை வெளியிட்டாரே, ஏன் அப்போது அவரிடம் பேசியிருக்கக்கூடாது? பழம் பெரும் நண்பர்கள் தானே இருவரும். காமராஜராவது முதலமைச்சரான பிறகு, 'ஸ்நேகம்' — உம்முடன் சினேகம், இன்றுநேற்றா? தென்னாட்டுத் திலகராகத் தாங்கள் இருந்த நாள் தொட்டல்லவா நேசம், பாசம்...

டாக்டர்:- ஆமாம்........அதைத்தான் நான் காமராஜரிடம் கூடச் சொன்னேன், என் வார்த்தையைத் தட்டமாட்டார் என்றேன்.

நிருபர்:- முகத்தில் கரி பூசிவிட்டார்!

டாக்டர்:- அவர், அரைச்சம்மதம் கூடத் தெரிவித்தார், ஆனால் அவருடைய கட்சித் தோழர்கள், மெத்தக் கசப்படைவார்கள் என்று அவருக்கு ஒருவிதமான அச்சம் ஏற்பட்டது என்று எண்ணுகிறேன்.

நிருபர்:- என்ன டாக்டர் இது! இத்தனை அன்யோன்யமாகப் பழகியும் உமக்கு அவருடைய குணம் தெரியவில்லையே! அவர், அச்சம் கொள்ளக்கூடியவரா! அதிலும் சீடர்களிடமா!

டாக்டர்;- அச்சம் என்றால், அச்சம் அல்ல! இப்படியே ஒவ்வொரு காரியத்திலும், வேகமாகத் துவக்கி, கடைசி நேரத்திலே கைவிட்டுவிடுவது என்றால், கசப்பு வளருமல்லவா...அதனால் ...

நிருபர்:- இந்த ஆராய்ச்சியை இப்போது நடத்திப் பலன்? அவர், ராமர் படத்தைக் கொளுத்தப் போகிறேன், காரணம் இன்னது என்று கூறினாரே, அன்றே அவரைக் கண்டு, கலந்து பேசினால் காரியம் இப்படியா கெட்டுக் கீரைவழி ஆகியிருக்கும்? ஊருக்கும் அவர் போவது! உள்ளத்தில் சரியெனப்பட்டதை எடுத்துக் கூறுவது. திட்டம் தயாரிப்பது! கழகத்தார்கள் கீர்சையை வரிந்துகட்டுவது. கடைசி நேரத்தில் நீர் சென்று, நிறுத்தும் என்று கூறுவது, அவர் உடனே நிறுத்திவிடுவது என்றால், சரி

யாகுமா? உம்மோட கீர்த்தி உயரும். அதற்காகவா, அவர் இத்தனை அரும்பாடு படவேண்டும்.

டாக்டர்:- போமய்யா, போம், நீர்வேறு என் வேதனையைக் கிளறுதீர், நம்பிச் சென்றேன் — ஏமாந்து திரும்பினேன்.

நிருபர்:- அவர் என்ன எண்ணுவார், உம்மைப்பற்றி?

டாக்டர்:- எவர்?

நிருபர்:- காமராஜர்?

டாக்டர்:- என்ன டாக்டர், உனக்கும் 'டெப்பே'தான்போலிருக்கே, என்று கேலி பேசுவார்.

நிருபர்:- வெளுத்ததெல்லாம் பால், கருத்ததெல்லாம் தண்ணீர் என்கிற போக்கு உமக்கு. உம்மை விட்டு ஏன் காமராஜர் ஆழம் பார்க்க வேண்டும்? அவரே போயிருக்கலாமல்லவா...?

டாக்டர்:- சரி, இதுதான் சமயமென்று தூபம் போடுகிறீரா?

நிருபர்:- அப்படி, தவறு எடுத்துக் கொள்வதாக இருந்தா, நான் அந்தப் பேச்சை எடுத்திருக்கவே மாட்டேன். எனக்கு மனசு கேட்காததாலே, சொன்னேன், வேறு ஒன்றுமில்லை.

டாக்டர்:- இதிலே என்னய்யா தவறு? நம்ம நேரு, கிருஷ்ணமேனனைக் கொண்டுதானே, எல்லா ராஜதந்திர காரியங்களையும் கவனித்துக்கொள்கிறார்; அதுபோல, நான், என்று கௌரவமாக எண்ணிக்கொள்ளப்படாதோ! ஆழம் பார்க்கிறார் என்று ஏன் தாழ்வாகப் பேசணும்? இது வேண்டுமென்றே, எனக்குக் காமராஜர் மீது அருவருப்பு உண்டாக்கச் செய்கிற சூழ்ச்சிதானே!

நிருபர்:- பார்த்தேளா, நான் பட்டவர்த்தனமாப் பேசறேன், தப்பாகவே அர்த்தம் செய்துகொள்கிறீர். கிருஷ்ணமேனனை, நேரு பயன்படுத்துகிறார் என்கிற உதாரணம் சொன்னீர் பாரும், சரி, ஒத்துக்கொள்கிறேன்......ஆனா, நேரு என்ன செய்தார் பார்த்தீரோ, இப்படிப்பட்ட ராஜதந்திர காரியத்திலே ஈடுபடுகிறவர் வெறும் 'மேனனாக' இருக்கப்படாது, என்றுஎண்ணி கிருஷ்ணமேனனை, மந்திரியாக்கி இருக்கார்......அதுபோல காமராஜர் தங்கள் விஷயத்திலே...

டாக்டர்:- பொல்லாத பேர்வழியாச்சே! சரி, புறப்படும், என் மனசைக் கலைத்துவிட வேண்டாம். எனக்கு அப்படிப்பட்ட ஆசை கிடையாது.

நிருபர்:- உமக்குக் கிடையாது டாக்டர், இருக்கப்படாது! ஆனா உம்மை ஒரு மந்திரிக்கோலத்திலே பார்க்கவேணும் என்கிற ஆசை அவருக்கு இருக்கவேண்டாமோ! இல்லையே! ஒருவகையிலே, இந்தத் தடவை, உமக்குத் தோல்வி ஏற்பட்டதிலே, எனக்கு ஒரு சந்தோஷம்னு சொல்லணும்......ஏன் தெரியுமோ, ஒவ்வொரு நெருக்கடியின் போதும், உம்மோட தயவிலே அவர் நிலைமையைச் சமாளித்துக் கொண்டு, துளி கூட விசுவாசம் காட்டாமல் உம்மை இலேசாக நினைக்கிறார், பாரும்; இந்தப் போக்குக்குத் தண்டனையாகவாவது, இந்தத் தடவை அவர் அனுபவிக்க வேண்டும்.

டாக்டர்:- போதுமய்யா உமது உபதேசம். இருக்கிற 'நேசத்தை'க் கெடுத்துவிடாதே......வேறே ஆளைப்பாரும்......

நிருபர்:- சரி, போகச் சொல்றேள், போகிறேன்... எனக்கும் நேரமாகிவிட்டது, நேரே அவரிடம் தான் போகிறேன்?

டாக்டர்:- பெரியாரிடமா...?

நிருபர்:- ராம, ராம. போயும் போயும் இந்த நேரமாப் பாத்து, அவரைப் பார்க்கப் போகச் சொல்கிறீரே, காமராஜ் அவாளைப் பார்க்கக் கிளம்புகிறேன்.

டாக்டர்:- அங்கே போய், ஏதாவது கலகம் மூட்டிவிடாதே.

நிருபர்:- டாக்டர், நீர் என்ன, என்னை நாரதர்ன்னே தீர்மானிச்சுவிட்டேரா...

டாக்டர்:- உம்மை எல்லாம் அந்தப் பரம்பரை என்று தானே சொல்றா!

★

அங்கே, அப்படி!

கல்லூரிகளுக்குச் சென்று பி.ஏ. எம்.ஏ., படிப்பதென்பது நாட்டிலுள்ள எண்ணற்றோருக்கு 'இமயமலை'யில் ஏறுவது போன்ற காரியமாகவே இருந்து வருகிறது. காரணம், இல்லாமைதான்! கல்லூரிப் படிப்பும், தொழில் துறைக் கல்வியும் பெரும்பாலும், பணம் படைத்தோருக்கே சொந்தமானவைகளாகும், இங்கு. அதனால் ஆசையும் ஆர்வமும் இருந்தாலும் ஒன்பதாவது பத்தாவது கூட படிக்க வழியின்றி, ஏங்கிய கண்களும் வீங்கிய மனமும் கொண்டோராக அலையும் இளைஞர்கள், ஏராளம், ஏராளம்.

இப்படிப்பட்ட இளைஞர்களுக்கு, வாய்ப்பு வழங்கும், வசதிகள், அமெரிக்காவிலிருக்கின்றன. பாதி நேரம் ஏதாவதொரு வேலை செய்து சம்பாதிக்கலாம்; அதே சமயத்தில் இன்னொரு பாதி நேரம் கல்லூரிகளில் சேர்ந்து படிக்கலாம். சம்பாதிக்க வாய்ப்பும் அதே நேரத்தில் படிப்பதற்கு சந்தர்ப்பமும் கிடைப்பதால் தமக்கு வேண்டிய நூல்கள், கட்டவேண்டிய சம்பளப்பணம், கைச்செலவுக்குக் காசு முதலியவைகளை இவர்களே தேடிக்கொள்ளுகிறார்கள்!

இங்கே அளிக்கப்படுவது போல அமெரிக்காவிலும், சர்க்கார் சார்பில் உபகாரச் சம்பளம் அளிக்கப்படுகிறது. ஆனால், ஒரு வித்தியாசம். இங்கே மாணவனின் மார்க்கையே முக்கியமாகக் கருதுவார்கள், அங்கு அவனுக்கு கலைத்துறை போன்றவைகளில் உள்ள ஆர்வமும், தகுதியாகக் கருதப்படுகிறது.

வசதியற்ற மாணவர்களுக்கு வேலை தேடித் தரும் பொறுப்பை கிட்டத்தட்ட எல்லாக் கல்லூரிகளும் ஏற்றுக்கொண்டுள்ளன, இதனால் மாணவர்களுக்கு, பல வசதிகள் கிடைக்கின்றன.

இங்கே பட்டம் பெற்றவர்களுக்கே, வேலைகள் கிடைக்கவில்லையே — படிக்க விரும்புகிறவர்களுக்கா கிடைக்கப் போகிறது? என்கிறீர்களா! என் செய்வது, வேதனையாகத்தான் உள்ளது!!

சிங்கமும் ★ ★ ★ ★ ★ ★ அட்டையும்!

"பலாத்காரத்தில் ஈடுபடுவது தவறு தான். ஆனால், அந்தப் பலாத்காரத்தை அடக்குகிறேன் என்று சொல்லி, சட்ட பூர்வமாக நடத்தப்படும் பலாத்காரம் இருக்கிறதே, அது மிகமிக மோசமானதாகும். சிங்கம் கொடுமையானதுதான்! ஆனால், அதைப் போல உருவத்தில் இல்லாவிடினும், இரத்தத்தை உறுஞ்சுகிறதே அட்டை, அதனைச் சிங்கத்தினும் கொடுமை என்பேன்!!", என்று டில்லிப் பார்லிமெண்டிலே கடந்த 30ந் தேதி பேசிய முன்னாள் நிதியமைச்சர் தேஷ்முக், தெரிவித்துள்ளார்.

பம்பாயில் சர்க்கார் நடத்திய அட்டகாசங்களைப் பற்றி விவரிக்கும் போதே இந்த விளக்கத்தைத் தந்துள்ளார். இதனை, அவர் நிதியமைச்சராக இருக்கும்போது கூறியிருந்தால், 'மராட்டியத்தில், இன்னொரு மகாத்மா!', 'மன்பதைக்கன்பா!', மணியே, பொன்னே, என்றெல்லாம் புகழுரையும் போற்றற் பாவும் வழங்கப்பட்டிருக்கும், ஏட்டாலும், நாட்டாலும். இன்றோ, அவர் ஒரு மாஜி! அதிலும், நேருவையே கண்டிக்கிற அளவுக்குத் துணிந்துவிட்ட ஒரு மாஜி!! எனவே, அவரது வாக்குக்கு, கொடுக்கப்பட வேண்டிய முக்கியத்துவம் அளிக்கப்படவில்லை.

ஆயினும், காங்கிரஸ் ஆட்சியின் கடந்த காலப் போக்கினையும், அது நடாத்தி வரும் துப்பாக்கிப் பிரயோகங்களையும் அறிந்தோருக்குத் தேஷ்முக் கூறும் வாசகத்திலுள்ள உண்மை விளங்கும்! ஒரு கன்னத்திலடித்தால் இன்னொரு கன்னத்தைக் காட்டு, என்றார் இயேசுநாதர் — அதனை, நடைமுறையில் செய்து காட்டினார், காந்தியடிகள். மறைவதற்கு முன்பு, பாகிஸ்தானுக்குப் பணம் ஒதுக்க நேரு குழாம், தகராறு செய்த போது, தான் உண்ணா விரதமிருந்து அதனை அவர்கட்கு அளிக்கும்படி செய்த உத்தமச் செயலை எவரும் மறக்க முடியாது. இன்னா செய்தாருக்கு இனியவை செய்ததன் மூலம், அவர், அடிகள் ஆனார்! அழியாத வரும் ஆனார்!!

அந்த உத்தமரின் சீடர்கள் என்று சொல்லிக்கொள்வோர், ஆட்சிப்பீடம் ஏறிய பிறகு ஆங்காங்கும் நடைபெற்ற தடியடிகளும், வேட்டு முழக்கங்களும் ஏராளமாகும். கம்யூனிஸ்டுகள் நாசவேலை செய்கிறார்கள் என்று சொல்லி அவர்களில் பலரை ஓடஓட விரட்டிச் சுட்டனர்-உடைந்த கிண்ணத்தில் மலத்தையும் நீரையும் கலந்து உண்ணடா உண்ணடா என்று உதைத்தனர் – அகப்பட்டவர்களை மரத்திலும் தூணிலும் கட்டி வைத்து படுத்தியபாடு கொஞ்சமல்ல. அப்படிச் செய்தபோதெல்லாம், நாட்டில் அராஜகமும் அட்டகாசமும் பரவாமலிருக்கவே இந் நடவடிக்கை எடுக்கப்பட்டதாகப் பதிலிறுக்கப்பட்டது.

அன்று மட்டுமல்ல, அதன் பிறகும் வயலிலே புயல் என்றாலும் படை பாயும்! ஆலையிலே, குமுறல் என்றாலும் இராணுவம் ஓடும்! அதிலும், ராஜ்யப் பிரிவினைக் கமிஷன் முடிவு வெளி வந்ததும், நேரு சர்க்கார் மாகாணங்களுக்கு விடுத்த உத்தரவும், நடந்து கொண்ட முறையும் இருக்கிறதே, அதை எந்த நாகரீக மனிதனும் ஒப்பான். ஏனெனில் பல மாகாணங்களுக்கு, இராணுவத்தைத் தயாராக வைத்திருங்கள் என்று கூடத்தந்தி மூலம் செய்தி பறந்தது.

ஏனிப்படி என்று யாராவது கேட்டால், அமைதியை நிலை நாட்ட, என்று அரசாங்கச் சார்பில் காரணம் கூறப்படும்! நாம், அருமந்த தோழர்களைத் தூத்துக்குடியிலும் கல்லக்குடியிலும் பிணமாகக் கண்டபோதும், குன்றத்தூர் நாரணமங்கலம் போன்ற இடங்களில் குண்டடிக்கு ஆளான போதும் இதே காரணத்தைத் தான் எடுத்துச் சொன்னார்கள்!

இப்படிச் சொல்லக் கற்றுக் கொடுத்தவன், ஆங்கிலேயன். அவனிடமிருந்து கற்றுக்கொண்ட பாடத்தையே இப்போதும், உபயோகிக்கிறார்கள், காங்கிரஸ் மந்திரிகள்.

அதைத்தான் கண்டிக்கிறார், தேஷ்முக். நின்றால் சுடு! கண்டால் சுடு!—என்று பம்பாயிலேயிருக்கும் சர்க்கார் நடந்துகொண்டது நியாயமா? அத்துமீறி மக்கள் நடந்து கொண்டார்களென்றால் அவர்களை அடக்க துப்பாக்கி ஒன்றினால் மட்டும்தான் முடியுமா? 'ஆம்' எனில், அதையாவது வெளிப்படையாகச் சொல்லுங்கள். அதை விட்டுவிட்டு, நாங்கள் அகிம்சாவாதிகள் என்று போர்வை போர்த்திக்கொண்டு அட்டையைப்போல ஏன் இரத்தத்தை உறுஞ்சுகிறீர்கள்—என்று கேட்கிறார்.

மக்கள், பாயும் சிங்கம் என்றே வைத்துக்கொள்ளுங்கள். அது எவ்வளவோ மேலாயிற்றே, சாதுவாகயிருந்துகொண்டே சதையையும் இரத்தத்தையும் உணவாக்கிக்கொள்ளும் அட்டையைக் காட்டிலும்!

அதனைத்தான் எடுத்துச் சொல்லுகிறார், தேஷ்முக். "அக்கிரமம் செய்தார்களென்றால் அந்தப் பலாத்காரவாதிகள்மீது நடவடிக்கையெடுங்கள். அதை விட்டு விட்டு, அமைதியை நிலைநாட்டப் போவதாகச் சொல்லி, வீதியிலும் வீட்டு வாசலிலும் இருக்கும் மாதர்களையும் அவர் தம் செல்வக் குழந்தைகளையுமா, சித்திரவதை செய்வது?" என்பதாக.

இந்தக் குற்றச்சாட்டினை எவரும் திட்டவட்டமாக இன்னும் மறுத்தனரில்லை

தேஷ்முக்காவது, மந்திரிப் பதவியை விட்டு விலகிவந்து இதெல்லாம் பேசுகிறார். மந்திரிசபையில், சட்டமந்திரியாக இப்போது இருக்கும் படாஸ்கர் என்பார், பகிரங்கமாகவே, பம்பாயில் நடைபெற்ற அக்கிரமங்களைக் கண்டிக்கிறார்.

காட்கில், நேருவுக்கு பழைய நண்பர் அவர் கூறுகிறார், சர்க்கார் ஒரு விசாரணைக் குழுவை நியமித்திருந்தால் எல்லாம் தெரிந்திருக்குமே, ஏன் செய்யவில்லை, என்பதாக.

80 பேர் பிணமானார்கள்
2500 தோட்டாக்கள் காலியாயின
450 பேருக்குக் காயம்

இத்தனையும் செய்தது, ஒரு காங்கிரஸ் சர்க்கார்! அதனைக் கண்டிப்பதும் ஒரு காங்கிரஸ் மந்திரியாக இருந்தவர்.

இவைகளைப்பற்றி ஏன் கேட்கவில்லை, என்பது தேஷ்முக்கின் விலகலுக்கான காரணங்களில் ஒன்றும்.

"உண்மையில் மராட்டியத்தில் என்ன நடைபெற்றது தெரியுமா? நேருவின் இஷ்டப்படி நடக்க மறுத்தோம் என்பதற்காகப் பழிவாங்கவே இப்படிச் செய்யப்பட்டது, பம்பாய் மராட்டியத்துடனிருக்கவேண்டும்என்றோம். ஆளும் முதலமைச்சர் மொரார்ஜி தேசாய் ஒரு குஜராத்தி, காங்கிரஸ் தலைவராகயிருக்கும் தேபரும் ஒரு குஜராத்தி. ஆதலால் அவர்கள் விருப்பத்தை அனுசரித்து நேரு நடந்துகொண்டாரேஒழிய, மராட்டிய மக்களாகிய எங்களை ஒரு சிறிதும் மதித்தாரில்லை" என்கிறார், காட்கில்.

வேட்டும், பிணக்குவியலும் தரப்பட்டது என்கிறார் வேதனையோடு!

பண்டித நேருவின் போக்கைக் கூர்ந்து கவனித்து வருவோருக்கு, 'அவர் எத்திசை நோக்கிச் செல்கிறார்?' என்பது தெளிவாகவே புரியும். அதிலும் நாம், நன்றாக உணர்வோம்! நம்மை'நான்சென்ஸ்' என்று சொன்னமைக்காக நாம் கண்டனம் தெரிவிக்கப்போக, "ஆமாம்! நான் கூறியது தவறுதான்" என்று பெருந்தன்மையோடு ஒத்துக்கொள்ளாமல் "ஆமாம்!சொன்னேன்.இப்போதும் சொல்கிறேன். நீங்கள் எல்லாம் காட்டு மிராண்டிகள்" என்று சொன்ன, 'கனவான்' அவர்.

அவருடைய பொதுவாழ்க்கையை, இப்போது ஏற்பட்டுள்ள 'தான்'எனும் மமதை அதிகமாகவே மாசுபடுத்தி வருகிறது! அதனால் தான் பம்பாய்க் கலவரங்களைக் கண்டும் காணாததுபோல இருந்தார்.

சபையில், தேஷ்முக் இடித்துரைக்கும்போது, வேதனையும் சோகமும்தாக்க பதிலளிக்க முயலுகிறார். அந்தப் பதிலில், அகில உலகப் பெருமை, தனக்கு நாட்டு வாழ்விலிருக்கிற அக்கரை, தான் இத்துணை நாளும் காங்கிரசுக்காக பட்ட தியாகம், இப்படி 'சுயசெய்தி'கள்உள்ளனவேஒழிய, விஷயவிளக்கம் ஏதும் இல்லை! எப்படி விளக்குவார்? பானையிலிருந்தாலன்றோ, அகப்பையில் வர!

காங்கிரஸ் கட்சி, பம்பாயில் மட்டும்தானா அக்கிரமம் செய்தது- இதோ, பஞ்சாபிலுள்ள ஹோசியார்பூரில் என்ன நடந்தது?

பம்பாயை ஆளும் சர்க்காரைப் போலவே, பஞ்சாபை ஆள்வதும் காங்கிரஸ் அரசுதான்.

அங்கே, 'செங்தெரு' எனுமிடத்தில் நிகழ்ந்ததென்ன?

குடும்பப் பெண் முதல் குமரிவரையுமன்றோ கற்பழிக்கப்பட்டனராம்!

பஞ்சாபே குமுறி எழுந்தது, கடையடைப்பு, வேலை நிறுத்தம், யாவும் நடந்தது—விளைவு, மீண்டும் பஞ்சாபில் இரத்த ஆறு ஓடும்படி செய்துவிடுமோ எனும் அச்சத்தால் ஒரு கமிட்டி போட்டு, இந்தச் சம்பவங்களைப் பற்றி விசாரித்தறியுமாறு, கட்டளை பிறப்பித்தது, டில்லி.

இதுபோன்ற கமிட்டிகளுக்கு கட்சிசார்பற்றவர்களையே பெரும்பாலும் தலைவராகப் போடுவார்கள் அதுதான் முறையும்.

ஆனால், காங்கிரஸ் தலைமை, ஒரு காங்கிரஸ்காரராகவே பிடித்துப் போட்டது! அப்போதுதானே பல வழிகளுக்கும் நல்லது.

அதனால் ஸ்ரீமன் நாராயண் எனும் பிரபல காங்கிரஸ்காரரைத் தலைவராகப்போட்டு, ஒரு விசாரணைக் குழுவை நியமித்தார்கள்.

அந்தக் குழு, என்ன கூறுகிறது தெரியுமா?

உண்மைதான்.

தேவைக்கு அதிகமான அளவு பலாத்காரம் உபயோகிக்கப் பட்டது.

ஊர்வலக்காரர்கள் ஓடிவிட்ட பிறகும் தொடர்ந்து தடியடி நடந்தது.

பெண்களையும் குழந்தைகளையும்கூட அடித்தது உண்மை.

பெண்களின் ஆடைகளையும் தலைமயிரையும் பிடித்திழுத்து மானபங்கப் படுத்தியதும் நிசமே

காங்கிரஸ் தலைவர் தலைமையில், காங்கிரஸ் மேலிடத்தால் நியமிக்கப்பட்ட கமிட்டி கூறுகிறது இப்படி எனில், எவ்வளவு கொடுமைகள் நிகழ்ந்திருக்கவேண்டும்?

இப்படியெல்லாம், இந்தக் காங்கிரஸ்காரர்களிடம் சிக்கி அவதிப்படும்படியாக என்ன குற்றம் புரிந்தனர், மக்கள்.

அப்படிக் குற்றம் புரிந்தவர்களே ஆனாலும், தேஷ்முக் கூறுகிறபடி,பலாத்காரத்தை,சட்டசம்மதம் பெற்ற பலாத்காரத்தின்மூலம் அடக்கும் ஆசை உளதேயொழிய, மக்கள் தம குறைகளைக் கண்டு அவைகளைப் போக்கி நல்லபெயர் பெறுவோம் எனும் ஆசை எங்கே உளது இன்றைய ஆளவந்தார்களுக்கு!

வெள்ளையன் தந்துவிட்டுப் போன வேட்டுக் குழாயைக்காட்டி, மிரட்டக் கற்றுக் கொண்டிருக்கிறார்கள், இப்பொழுது.

இல்லையெனில், பம்பாயில்—கல்கத்தாவில்—பஞ்சாபில், இப்படியெல்லாமா, ஏற்படும்.

அந்நியன் படையெடுப்பில் பலர் மாள்வதுண்டு! ஆனால், ஆளும் சர்க்காரேயன்றோ தனதுமக்களை சுட்டுப் பொசுக்கியும், மான பங்கப் படுத்தியும் ஆனந்தம் அனுபவிக்கிறது

அதனை, ஆறாண்டுக்காலம் ஆட்சிச் சக்கரத்தை சுற்றிய தேஷ்முக்கும் அறிவிக்கிறார்.

ஆளும் கட்சியின் தலைவர்களில் ஒருவரானவரும், விபரங்களோடு தெரிவிக்கிறார்.

இதற்கு, என்ன பதில் சொல்வார்களோ, காங்கிரஸ் மக்களுக்காகப் பாடுபடும் கட்சி என்று கர்ச்சிக்கும காமராசர்கள்! ★

மெய்ஞ்ஞானம்

ஞானத்தைத் தேடி அலைந்த சித்தார்த்தன் சில சாதுக்களைச் சந்தித்தான். 'ஞானத்தை நான் கண்டடைவது எப்படி'? என்றான்.

"ஞானத்தை அடைய ஆத்மாவை வளப்படுத்த வேண்டும்; ஆத்மாவை வளப்படுத்த உடலைப் பட்டினி போட்டுத் துன்புறுத்த வேண்டும்; உடலின் பெருந் துயரத்தால் ஆத்மா பக்குவமடைகிறது. இதுவே பிராமணரின் கூற்று." என எழுதபபட்டிருக்கிறது' என்றனர் சாதுக்கள்

'ஞானம் பெற அதுவே வழியென்றால் நானும் அப்படியே முயற்சிக்கிறேன்' என்று அந்தச் சாதுக்களோடு சேர்ந்து காடேகினான். தன் உடல் எலும்புக் கூடாகத் தோற்றம் அளிக்கும் வரை உண்ணாதிருந்தான். நடக்க முடியாதபடி உள்ளங்காலெல்லாம் பலமிழந்தன.

ஒரு நாள் பசி தாளாது மயங்கி மூர்ச்சிழந்து விட்டான் சித்தார்த்தன். அவன் இறந்து விட்டதாக எண்ணினர் சாதுக்கள். ஆனால் அவன் தெளிந்தான். பேசப் பலம் வந்தது. "தோழர்களே! இப்போது முதல் உண்ணா நிலையைத் தவிர்க்கிறேன்! என் உடலைத் துன்புறுத்துவதுமில்லை! மனிதன் உண்ணாதிருந்து, உடலை வருத்தி அறிவைப் பெறவேண்டும் என்பது சுத்தத் தவறு. நான் உண்டு பலம் பெறப் பெறவே உலகைப் பற்றியும் மதத்தைப் பற்றியும் என்னால் தெளிவாகச் சிந்திக்க முடிகிறது" என்றான்.

இதைக் கேட்ட சாதுக்கள், 'இவன் நல்லசாதுக்களின்பாதையிலிருந்தும் தவறி விட்டான்' என்று அவனை விட்டுவிலகினர்.

சித்தார்த்தன் பின்பு உண்டான். பல நாட்களாக, பல வாரங்களாக, பல மாதங்களாகக் காடுகள் தோறும, நாடுகள் தோறும், வீதிகள் தோறும், வீடுகள் தோறும் அலைந்தான். காய்களைத் தின்றான். காட்டுக் கனிகளைத் தின்றான்.

*　　*　　*

'புத்தன்' ஆனான்.

தான் கண்ட உண்மையை உலகுக்கு அறிவிக்க முடிவு செய்தான். முதலில் விரட்டிய அந்தச் சாதுக்களுக்குக் கூற வேண்டி காசி நகருக்குச் சென்றான். 'கற்றுக்கொள்ள விருப்பமில்லாதவர்களுக்குக் கற்றுக் கொடுப்பதைவிட விரும்புகிறவர்களுக்குக் கற்றுக் கொடுப்பது எளிது' என எண்ணி அவர்களிடம் சென்றான்.

நகருக்கு வெளியில் மரக்காவில் அவர்கள் இருந்தனர்.

'நீ தேடிக் கொண்டிருந்த அறிவை அடைந்துவிட்டாயா?' சாதுக்கள் கேட்டனர்

அடைந்தேன்—பதிலிறுத்தான், புத்தன்

'உலக ஞானம் என்பது என்ன?'— ஒரு சாதுவின கேள்வி.

செயல் விதியாகிய 'கர்ம'த்தில் நீங்கள் நம்பிக்கை கொள்கிறீர்களல்லவா? — புத்தனின் விடை கேள்வியாக மாறியது.

'ஆம்!'—சாது.

'அதுவே ஞானத்தின் ஆரம்பம்! நல்லதிலிருந்து நல்லதும், தீயதிலிருந்து தீயதும் கிட்டும். இதுவே வாழ்க்கையின் முதல் ஒழுங்கு. வாழும் உயிர்கள எல்லாம் இதனாலேயே ஆளப்படுகின்றன!'

'இது ஒன்றும் புதிதல்லவே!'—எதிர்ப்புக் கிளப்பினர் சாதுக்கள்.

'ஆம். புதிதல்லதான்! ஆனால் அந்த ஒழுங்கு உண்மையானதாக இருக்குமானால் நம்முடைய கடவுளருக்குச் செய்யும் பலிகளும், படையல்களும், பூஜைகளும், பிரார்த்தனையும் முட்டாள்தனமானதன்றோ!'

'ஏன்? அப்படி!'

'தண்ணீர் எப்போதும் மேட்டிலிருந்து பள்ளத்திற்கு ஓடுகிறது. நெருப்பு எப்போதும் சூடாக இருக்கிறது. பனிக்கட்டி எப்போதும் குளிர்ச்சியாக இருக்கிறது. இந்தியாவிலுள்ள அத்தனை கடவுள்களையும் நீங்கள் பூஜித்தாலும் தண்ணீரை மேட்டுக்குப் பாய்ச்ச முடியாது! நெருப்பைக் குளிராக்க முடியாது! பனிக்கட்டியைச் சூடாக்கவும் முடியாது! ஏனென்றால், பொருள்களை, அவை எப்படிப்பட்டதோ அப்படியே நிலை பெற்றிருக்கும்படி செய்யும் வாழ்க்கை நியதி ஒன்று இருக்கிறது. அதுபோலவே நடந்த காரியத்தை மீண்டும் செய்ய இயலாது. ஆகையால் கடவுளர்க்கு இடும் படையலும் பிராத்தனையும் பயனற்றவை!

'சரிஎனத் தோன்றுகிறதே! உண்மைதான்!'—முணுமுணுத்தனர்.

'அது உண்மையானால், நம் மக்கள் வணங்கும் எல்லாச் சிலைகளும் பயனற்றவை. உலகப் போக்குகளில் எதையும் மாற்றும் சக்தி இச் சிலைகட்கு இல்லையென்றால், அவற்றை நாம் வணங்கவேண்டியதுமில்லை, தொழவேண்டியதுமில்லை. ஒரு மனிதன் நல்லதைச் செய்தால் நல்லதைப் பெறுவான். தீயதைச் செய்தால் தீயதைப் பெறுவான். இந்த நாட்டில் உள்ள எல்லாச் சிலைகளும் ஒன்று சேர்ந்தாலும் இதை மாற்ற முடியாது. எனவே சிலை வணக்கம் தவறு.'

'இதுவும் உண்மைதான்!' என்றனர், சாதுக்கள்.

—பே. சா. தனராசு

★ 300-30-175 ★

அறிவுச் சூனியனும் அப்பாவியும் சந்தித்தனர்.

பஞ்ச பாண்டவர்கள் என்றால் எத்தனை பேர்? என்று கேட்டான் அறிவிலி!

அட முட்டாளே! பஞ்ச பாண்டவர்கள் எத்தனை பேர் என்று தெரியாதா உனக்கு! கட்டில் கால் போல! என்றான் அப்பாவி! அறிவிலி அதனைப் புரிந்துகொள்ள வேண்டுமென்று எண்ணிக் கொண்டு பஞ்ச பாண்டவர்கள், கட்டில் கால் போல! என்று கூறிக் கொண்டே, மூன்று விரல்களைக் காட்டினான் — இரண்டு என்று தரையில் எழுதினான்—பிறகு அதனையும் கலைத்து விட்டான்'!

சிற்றூர்களிலே, வேடிக்கையாக இச் சிறு கதையைக் கூறுவர் தெளிவற்றவர்களின போக்கை விளக்கிட.

அப்பாவிகள் மட்டும்தான் இப்படி என்று எண்ணிவிடாதீர்கள், அதிமேதாவிகளும், இது போலத் தான், என்று கூறுவது போன்ற தோர், வேடிக்கையான செய்தி வெளி வந்திருக்கிறது.

வருமான வரி கொடுக்காமல் துரைத்தனத்தைப், பல பணமூட்டைகள் ஏய்த்துக்கொண்டுள்ளன!

இந்தப் பிரச்சினை குறித்து ஆராய்ச்சி நடத்தி, தக்க நடவடிக்கைக்கான அறிவுரை கூறுவதற்காக, நேரு சர்க்கார் பிரிட்டிஷ் பேராசிரியர் ஒருவரைத் தருவித்தனர்

இவர் வருமான வரித் துறையில் நிபுணர்; பெயர் கில்டர்.

துரைத்தன அழைப்பைப் பெற்ற இந்தத் துரைமகனார், திறம்படப் பணியாற்றி, ஆண்டு ஒன்றுக்கு 300 கோடியிலிருந்து 400 கோடி ரூபாய் வரையில், வருமான வரி தராமல், ஏமாற்றப்பட்டு வருகிறது என்று ஓர் கணக்குக் கொடுத்தார்!!

எந்த நாட்டிலும், இப்படிச் சுளை விழுங்கிகளை விட்டு வைத்திருக்க மாட்டார்கள்—ஆனால் சமதர்மபுரி செல்லும் ஆர்வத்திலும் அவசரத்திலும், காங்கிரஸ் சர்க்கார், இப்படிப்பட்ட எத்தர்களின் செயலைக் கண்டறியவில்லை!!

ஆவடி—அங்கிருந்து அமிருத சரஸ், என்று, சமதர்மப் பயணம் நடத்துகிறது, காங்கிரஸ் கட்சி—அதுதான் சரி! அருமையான பயணம்! அழகான இலட்சியம்!! என்று பாராட்டுரை வழங்கியபடியே, முதலாளிகள், வருமான வரியைத் தராமல், மறைத்து விடுகிறார்கள்.

தொகை 300 கோடி-400 கோடி! என்று நிபுணர் கணக்குக் கொடுக்கிறார்!!

இதற்காகவே தருவிக்கப்பட்டவர். இந்தத் துறையில் அறிவாற்றல் மிக்கவர் என்பதனாலேயே இங்கு தருவிக்கப்பட்டவர். வெள்ளையருக்கு இங்கு என்ன வேலை? எமது நாட்டுக்குரிய பிரச்சினைகளிலே, தலையிட இவர்களுக்கு என்ன உரிமை? எமது பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் திறம் எமக்கு நிரம்ப இருக்கிறது, இதற்கொன்றும் "இரவல் மூளை" தேவையில்லை, என்று இடி முழக்கமிட்டவர்தான், நேரு பண்டிதர்!

தேசீயத் தன்மானம்!!

தேசவிடுதலைப்போராட்டகாலத்திலே, தீப்பொறி பறந்தது அந்தத் தீரர் பேச்சில்.

இப்போது, அவரேதான், பிரிட்டிஷ் நிபுணரைத் தருவித்தார்—பாரதத்தின் பிரச்னை பற்றிய ஆராய்ச்சி நடாத்த!

வந்த நிபுணர், ஆண்டொன்றுக்கு 300 கோடிரூபாய்க்கு மேல், முதலாளிகள், ஏய்த்து ஏப்பம் விடுகிறார்கள் என்று கூறினார்.

ஆனால், வேறோர் நிபுணர், இதனை ஏற்றுக்கொள்ளவில்லை! **இவர், சுதேசி நிபுணர்!**

டில்லி அமைச்சர்களும் அவர்களுக்கு அறிவுத்துணை அளிப்போரும் கூடியுள்ள அவையில், சுதேசி நிபுணர், **ஷா**, கூறுகிறார், "நிபுணர் கில்டர் கூறியது தப்புக் கணக்கு. வருமான வரி தராமல், முதலாளிகள், துரைத்தனத்தை ஏமாற்றுவது என்னமோ உண்மை, சர்க்காருக்கு அது தெரியும்! ஆனால் கில்டர் கூறுவதுபோல, மூன்று நூறும் அல்ல, நாலு நூறும் அல்ல, முப்பது கோடி "ரூபாய் இருக்கலாம்" என்கிறார்.

பிரிட்டிஷ் நிபுணர் 300 கோடிக்கு மேல் இருக்கும் என்கிறார்.

காங்கிரஸ் நிபுணர் 30 கோடிதான் இருக்கும் என்கிறார்.

முப்பது கோடி ரூபாயா? 300 கோடி ரூபாயா? என்பது இருக்கட்டும், பொது மக்கள், இந்த நிபுணர்களில், எந்த நிபுணரின் பேச்சை நம்புவது!

சுதேசி நிபுணரின் பேச்சைத் தான் நம்ப வேண்டும்—தேச பக்தி உள்ளவர்கள் இந்தக் கடமையிலிருந்து தவறலாமா! என்று வாதாடுவர். அதற்காக, **ஷா** கூறும் பேச்சினை நம்புவது என்றால், ஏன் நேரு பண்டிதர், வெளிநாட்டு நிபுணரை வரவழைக்க வேண்டும் என்று கேட்கத் தோன்றுகிறது. அப்படிக் கேட்பதோ, தேசத் துரோகம்! ஏனெனில், நேரு பண்டிதர் எந்தக் காரியம் செய்தாலும்,'தேச நன்மை'யை மனதிற் கொண்டுதானே செய்திருப்பார்! அதனைச் சந்தேகிக்கலாமா? மிகப் பெரிய தேசத் துரோகமாயிற்றே. அப்படியானால், வெள்ளைநிபுணர் கூறும் 300 கோடிதான் சரியான கணக்காகக் கொள்ள வேண்டும். ஆனால்

"ஏ! பாரத தேசாபிமானமற்ற பதரே! சுதேசிநிபுணரின் சொல்லை நம்பாத, நீயும் ஒரு தேச பக்தனா?" என்று இடித்துக் கேட்டிட ஏராள மானவர்கள் இருக்கிறார்கள்! இதைக் கவனிக்கும்போது, ஷா தருகிறகணக்குத்தான், சரிஎன்று தலை அசைக்க வேண்டும்போல் தோன்றும்! இந்நிலையில், உண்மை யான தொகைதான் எவ்வளவு? முப்பதா? முன்னூறா?

பொது மக்கள், இந்தச் சிக்கல் தீரவே வழியின்றி சிரமப்படும் போது, சுதேசமித்திரன், வேறு புதிய சிக்கலைத் தருகிறது. வெளி நாட்டு நிபுணரின் கணக்கும் உள் நாட்டு நிபுணரின் கணக்கும், இப்படி மாறுபட்டு இருக்கிற நிலையில், சுதேசமித்திரன், மூன்றாவது கணக்கு ஒன்றைத் தருகிறது! இந்தக் கணக்கும், நிபுணர் தயாரித்ததுதான்.

மத்திய ரெவின்யூ போர்டு தகவல்களையும் தஸ்தாவேஜி களையும்" ஆராயாமலா இருக்கும்? அந்த போர்டு "வருஷ வாரியில் 175 கோடி ருபாய், வருமானவரித் துறையில் கோட்டைவிடப்படுகிறது" என்று, கூறுகிறது.

300

30

175

இந்தத் தொகையிலே, எது சரி யானது என்று மக்கள் ஏற்றுக் கொள்வது? பஞ்சபாண்டவர்கள் எவ்வளவுபேர் என்பதா தெரியாது கட்டில்கால்போல!! — என்று வேடிக்கை பேசப்படுகிறதே, அது எவ்வளவோ மேல் என்றல்லவா தோன்றுகிறது. துரைத்தனத்தை ஏமாற்றி, மக்களுக்குத் துரோகம் செய்து, கொழுத்துக் கிடக்கும், முதலாளிமார்கள் கைகொட்டி அல்லவா சிரிப்பார்கள், சர்க்கார் மக்களுக்கு அளித்திடும் கணக்கு உண்டாக்கும் சங்கடத்தைக் கண்டு!!

இந்த இலட்சணத்தில், காம ராஜர், "பணக்காரர்மீது ஏன் இந் தப் பயல்கள் பகையைக் கக்கு கிறார்கள்? பணக்காரன், கொள்ளை அடிக்கிறான், பெரும் இலாபம் திரட்டுகிறான் என்று ஏன் அங்க லாய்த்துக்கொள்கிறார்கள்? பணக் காரனிடம் இலாபம் சேர்ந்ததும், நாங்கள் ரூபாயில் பதினைந்தணாவை வரிபோட்டு, வாரி எடுத்துக்கொள் கிறோமே!"—என்று பொருளா தாரம் பேசுகிறார்!!

நிபுணர்கள், ஆராய்ச்சி நடத்து கிறார்கள், வருமான வரித் துறை யில், நடந்துகொண்டிருக்கும் மோசடியின் அளவு என்ன என் பது குறித்து!

வெளிநாட்டு நிபுணர் 300 என் கிறார்.

உள்நாட்டு நிபுணரோ 30 என் கிறார்.

மத்திய ரெவன்யூபோர்டு 175 என்கிறது!!

"ஏன் இத்துணை தொல்லை, எங் களையே கேளுங்களேன், எங்களுக் கல்லவா உண்மையான கணக்குத் தெரியும்! என்று முதலாளிகள் கூறுவார்கள்! பொருளாதார நிபு ணர் காமராஜரின் வாதத் திறமை யின் துணையையும் பெற்றுக் கொண்டு அவர்கள் அரசோச்சு கிறார்கள்.

"ஐயோ பாவம்! முதலாளி என் றால், பானைவயிறு படைத்தவன் என்று "பழய பாணியில்" திட்டு கிறார்களே! முதலாளிகள் இப் போது, முன்புபோல் இல்லை! இளைத்துக் கிடக்கிறார்கள்" என்று நேருபண்டிதர் பேசுகிறார்.

பம்பாய் படேலோ, "முதலாளிகள் எங்கே இனி இருக்கப்போகிறார் கள்; அந்தப் பரம்பரை அழிந்து கொண்டே வருகிறது! இனி, ஐந் தாண்டுத் திட்டங்களுக்கெல்லாம் கூட, பாமரமக்கள்—ஏழை எளியவர் கள் பண உதவி செய்தால்தான் உண்டு, பணக்காரரிடம் பணம் இல்லை!"—என்று பரிவுடன் பேசி னார், கமிட்டிக்கூட்டத்தில்.

"யாரய்யா சொன்னது உமக்கு, பணக்காரரிடம் பணம் இல்லை என்று! ஏராளமாக இருக்கிறது; வளர்ந்துகொண்டே இருக்கிறது! மன்னர்களிடம்மட்டும் 'பென்ஷன்' தொகை எவ்வளவு குவிந்திருக்கி றது தெரியுமா? முன்பெல்லாமா வது, இவர்களுக்கு ஆடம்பரத்துக் காக ஏராளமாகச் செலவழிந்தது, இப்போது அதுகூட மிச்சம்! பணம் குவிந்துகிடக்கிறது. அவர் களிடமிருந்து ஐந்தாண்டுத் திட் டத்துக்குப் பணம் பெறத்தான் வேண்டும். சாகும்போது டணத்தை மூட்டை கட்டியா தூக் கிக்கொண்டு போகப்போகிறீர்கள், சத்காரியத்துக்குக் கொடுங்கள் என்று கேட்டு வாங்கவேண்டும்" என்று கூறி படேலுக்குப் புத்தி புகட்டியதுடன், தந்தையின் தவ றான போக்கையும் திருத்த முற் பட்டார், இந்திரா காந்தி, நேருவின் திருக்குமாரி, அதே கமிட்டிக் கூட் டத்தில்.

திட்டவட்டமாகவே தெரிவிக்கி றார், பம்பாய் கவர்னர், அரிகிருஷ்ண மேதாப், "முதல் ஐந்தாண்டுத் திட்டம், ஏழை, பணக்காரன் பேதத்தை, மேலும் அதிகமாக்கிவிட்டது!" என்று.

யார் என்ன சொன்னாலும், நான், "ரூபாயில் பதினைந்தணா" என்ற என் பொருளாதார நிபு ணத்துவத்தைமட்டும் பேசாம லிருக்கமாட்டேன் என்று கூறிக் கொண்டு, காமராஜர், ஓரணாவின் ஒய்யார பங்களாவில் விருந்து உண் பதும், உயர்தர மோடாரில் சவாரி செய்வதும் உபசாரம் பெறுவது மாகக் காலந்தள்ளுகிறார், இடை யிடையே, "பதினைந்தணாக்களைப் பெற்று பஞ்சம், பசி, பட்டினி, வேலையில்லாக் கொடுமை ஆகி யவைகளால் பரதவிக்கும் பாமரர் களையும் பார்த்து, "இரு, பொறு!" என்று உபதேசமளிக்கிறார்.

சீமான்களோ, வருமான வரி தராமல், துரைத்தனத்தை ஏய்க் கிறார்கள். கணக்கே, சரியாகக் கிடைக்கவில்லை!

30

300

175

என்று நிபுணர்கள், ஒருவருக் கொருவர், சச்சரவிட்டுக்கொண் டிருக்கிறார்கள்!!

★

பெயரிடல்

திண்டிவனம் இராமவிலாச உணவு விடுதி உரிமையாளர் தோழர் வெ. நடராசனின் புதல்வனுக்குத் தோழர் அ. பொன்னம்பலனார் தலைமையில் தோழர் அண்ணா துரை அவர்களால் 23—7—56ல் இளங்கோ எனப் பெயரிடப்பட்டதன் நினைவாகத் "திராவிட நாடு" வளர்ச் சிக்கு ரூபா 11—0—0 அன்பளிப்புத் தரப்பட்டதை நன்றியோடு பெற்றுக் கொண்டோம்.

ஊர்வலம்

[ஞானக்கண் பேட்டி]

★

"எனக்கு ஒன்றுமே புரியவில்லை இந்திரா! எவ்வளவுதான் நான் இந்தியாவின் ஐக்கியம் பற்றிப் பேசினாலும், யாரும் அதைப் பொருட்படுத்துவதாகத் தெரியவில்லை. பாரேன்! பம்பாய்ப் பிரச்னையைப்பற்றிப் பேசிய காட்கில் சொல்லுகிறார், மராட்டியர் என்ன மட்டமா? குஜராத்தியர் என்ன உயர்வா? என்று. காட்கில் எவ்வளவு பெரிய தியாகி! அவர், இப்படி பிரித்துப் பேசுகிறார் அம்மா, நம்ம ராமானந்த தீர்த்தரைத் தெரியுமல்லவா, உனக்கு? ஐதராபாத்காரர் காங்கிரசுக்கே தூண்போன்றவர், அங்கு. அவர் கூட என்போக்கைக் கண்டிக்கிறார்! சுரேஷ்சந்திரா என்ற ஒரு பார்லிமெண்டு மெம்பர், அவரும் ஐதராபாத்காரர்தான் — அவர் கூட துணிந்து சொல்லுகிறார், பம்பாய் பற்றிய என் முடிவு அக்கிரமமானது என்று. தேஷ்பாண்டேயைத் தெரியுமோ, பம்பாய் காங்கிரஸ்காரர், அவரும் ஒருபிடிபிடிக்கிறார் என்னை. எல்லாவற்றையும்விட, இப்போதுதானே நீயும் நானும் உனது குழந்தைகளுமாக ஐரோப்பா முழுவதும் ஒரு சுற்றுச் சுற்றிவிட்டு வந்தோம். அங்கெல்லாம், என்னை எப்படிப் போற்றினார்கள். அந்த மகிழ்ச்சியைக் கூட நான் அனுபவிக்க முடியவில்லை. இந்த, தேஷ்முக் — அப்பா! எண்ணினாலே எரிமலையாகிறது மனம் — என்னை சர்வாதிகாரி என்கிறார், இஷ்டம்போல் நடப்பவன் என்கிறார், மார்வாரி குஜராத்தி பணமூட்டைகளுக்குப் பல்லிளிப்பவன் என்று குற்றம் சாட்டுகிறார். என்னுடைய மந்திரிசபையில் நிதி மந்திரியாகயிருந்தவர் இப்படிப் பேசினார் என்றால் இந்நேரம் அகில உலகமும் அல்லவா பரவியிருக்கும்! என்ன நினைப்பாகள் அங்குள்ளவர்களெல்லாம் என்னைப்பற்றி?" என்று மிகவும் வேதனையுடன் சொல்லிக்கொண்டிருந்தார், பண்டிதநேரு.

"ஆமாம்! செச்சே, இவ்வளவுதானா இவர் கதை? ஏதோ, இந்தியாவே இவர் கையில்தானேயிருக்கிறது என்று எண்ணினோம்! அங்கிருந்து வரும் செய்திகளைப் பார்த்தால் அப்படியில்லைபோல் தோன்றுகிறதே! என்றுதான் எண்ணுவார்கள் பண்டிட்ஜி..." என்றேன்.

"என்ன?" என்று கேட்டவண்ணம் நிமிர்ந்துபார்த்த அவர், "நீயா? இந்திரா அல்லவா இருப்பதாக எண்ணிப் பேசினேன்!" என்றார், கொஞ்சம் திகைப்புடன். குழப்பத்தில், நான் வந்ததைக் கூடக் கவனிக்கவில்லை போலிருக்கிறது நீங்கள் என்று சொல்லிவிட்டு ஓட்டமாக காங்கிரஸ் தலைவர் தேபரின் விடுதி நோக்கிக் கிளம்பினேன்!

தேபரின் முகம் கவலைக்குறிகளோடு காட்சி அளித்தது. "என்ன தேபர்ஜி! ஏதோ பெரிய யோசனைபோலிருக்கிறது" என்றேன்.

ஆமாம்,ஞானக்கண்! இந்தியா இன்னும் பத்து ஆண்டுகளில் எப்படி இருக்கும், என்று நினைக்கிறாய்?" என்றார்.

"இந்தியா என்பது இருக்குமா, என்று சந்தேகப்படுகிறேன், நான்!" என்றேன்.

"அந்தச் சந்தேகம்தான் எனக்கும் வந்துவிட்டது..."

"உங்களுக்குமா?"

"ஆமாம்! உண்மையைச் சொன்னால் என்ன. எந்த நேருஜியைக் கண் கண்ட தெய்வமென்று கருதிக் கொண்டிருந்தார்களோ அந்த நேருஜியின் போக்கைக் கண்டிக்கவும், மறுத்துப் பேசவும் ஆரம்பித்துவிட்டார்கள் — பம்பாய்தான் உனக்குத் தெரியும்! பீகாரில், பார்லிமெண்டு மெம்பர்களெல்லாம் தம்முடைய பகுதி வங்கத்துடன் சேர்க்கப்பட்டிருப்பதாகவும் அவைகளைப் பீகாருடன் இணைக்காவிடில் போராட நேரும் என்று எச்சரிக்கிறார்கள்! இதேபோல, வங்கக் காங்கிரஸ்காரர்களும் சண்டைக்கு வருகிறார்கள். ஒரிஸாவிலோ, முதலமைச்சராக யார் வருவது என்கிற போட்டியோடு எல்லைத் தகராறு வேறு! மைசூரில், அனுமந்தையாவை விரட்ட அங்குள்ள கட்சி முஸ்தீபு செய்கிறது. பஞ்சாபைப் பற்றியோ கேட்க வேண்டாம். ஜகத் நாரயண் என்று ஒரு காங்கிரஸ்வாதி. மந்திரியாகக்கூட இருந்தார், இதோ அவர் கட்சியிலிருந்து விலகுவதாக ராஜினமா அனுப்பியிருக்கிறார். முன்பெல்லாம், எந்தத் தகராறானாலும், நேருஜீ சொன்னார் என்றால் வாயை மூடிக்கொண்டு கப்சிப் என்று போய்விடுவார்கள்! இப்போது, அவர் சொன்னால் என்னய்யா? எங்க மராட்டியருக்கு யார் பதில் சொல்லுவது! குஜராத்திக்குக் கூறுவது யார்; வங்காளிகள் ஒப்பமாட்டார்கள், பஞ்சாபியருக்கு ஒவ்வாது!—என்று இப்படிப் பேசுகிறார்களே ஒழிய, எவரும் இந்தியா என்றே எண்ணிப் பார்ப்பதில்லை. அதை நினைக்கும்போது எனக்கு அழுகையாக வருகிறது!" என்றார்.

"அழாதீர்! எவ்வளவுதான் நேருவும் நீங்களும் அநீதி இழைத்தாலும், அடித்தாலும், குட்டினாலும், பாதாரவிந்தமே கதி என்று இருப்பவர்களும் இருக்கிறார்கள்..." என்றேன் நான்.

"யார்? யார்?" என்றார், தேபர்.

"தமிழ் நாட்டுக் காங்கிரஸ்தான்! தேவிகுளம் பீர்மேடு போயிற்று — தமிழ்நாடு எனப் பெயர்வைக்கப்படவில்லை—செங்கோட்டை இரு துண்டாக்கப்பட்டது — எல்லாவற்றிற்கும் மேலாக இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் பட்டைநாமம்குழைத்துத் தீட்டப்பட்டது. ஆனாலும், உங்கள் கட்டளையையே சிரமேற் தாங்கி நடப்போம் என்று கூறவில்லையா?" என்றேன்.

"ஆமாம்! ஆமாம்! ஆனாலும், அவர்களைப் பற்றியும் எனக்கு நம்பிக்கையில்லை, ஞானக் கண். உள்ளுக்குள்ளேயே ஒரே போட்டியாம் — வரப்போகிற தேர்தலில் தனக்கு எதிரியாக நடப்பவர்களையெல்லாம் காங்கிரஸ் டிக்கட்டில் நிறுத்திவைக்கமாட்டேன் என்கிறாராம் காமராஜ். அதனால், பல்வந்த்ராய் என்பவரையும் நவகிருஷ்ணசௌத்ரியையும் அங்கு போய் சமரசம் காணச் சொல்லியிருக்கிறேன்...", என்றார்.

இன்னும் கொஞ்ச நேரம் அவருடன் இருந்தால் எனக்கும் அழுகை வந்துவிடும் போலிருந்தது! அதனால், அங்கிருந்து ஊருக்குக் கிளம்பலாம் என்று புறப்பட்டேன்.

"என்ன, இவ்வளவு தூரம் வந்து விட்டு என்னைப் பார்க்காமல் போகிறாயே?", என்கிற குரல் கேட்டுத் திரும்பினேன். 'பெர்டினுக்ஸ்' எனும் பெயரில், 'மெயில்' பத்திரிகைக்கு விசேடக் கட்டுரைகள் எழுதுபவர், என்னைத் தட்டி நிறுத்தினார்.

"என்ன, நண்பரே!"

"எப்படியிருக்கிறது, ஊர்?"

"வழக்கம் போலத் தேய்ந்து கொண்டிருக்கிறது..."

"அது சரி! நீங்களெல்லாம் வரப் போகிற பொதுத் தேர்தலில் போட்டியிடப் போகிறீர்களாமே?"

"ஆமாம்! தன்னை எதிர்க்க எந்தக் கட்சியும் இல்லை என்கிற தைரியத்துடன் ஆளவோர் நடக்க ஆரம்பித்து விட்டார்கள். அதனால் இந்த முடிவுக்கு எங்களைக்கொண்டுவந்து விட்டார்கள், மக்கள்..."

"கேள்விப்பட்டேன், நீங்கள் தேர்தலில் நிற்கப்போவதாக அறிவித்தது முதல் காமராஜ் அங்கே இங்கேயென்று அலைந்தபடியே இருக்கிறாராமே!"

"ஆமாம், நாங்கள் தேர்தலில் நிற்கப் போகும் விஷயத்தை எடுத்து விளக்கும் முக்கிய பிரச்சாரகராக அவர்தான் விளங்குகிறார்!"

"...பாபம்! அலையட்டும். ஆனால் ஒரு விஷயம். இங்கே டில்லியில் என்ன பேசிக்கொள்கிறார்கள் தெரியுமோ?"

"யார்?"

"பெரியவர்கள்!"

"என்ன பேசுகிறார்கள்?"

"காங்கிரஸ்தான் கலகலத்து வருகிறது. அதிலும் தென்னாட்டில், யார் காங்கிரஸ்வாதி என்பதிலேயே போட்டியிருக்கிறது. அந்தச் சண்டையைத் தீர்ப்பதென்பது இந்த யுகத்தில் முடியாது போலிருக்கிறது, ஆட்சியோ, கண்டவனுக்கும் பெண்டாகும் நிலையில் இருக்கிறது! இந்நிலையில் வரப்போகிற தேர்தலில்... ஊம்...எனக்கு நம்பிக்கையில்லை......, என்று பேசிக்கொள்கிறார்கள்."

"அப்படியா?", என்று சொல்லிவிட்டு, அங்கிருந்து கிளம்பினேன்.

★

6-ம் பக்கத் தொடர்ச்சி

என்பது பற்றி எண்ணிப்பார்த்த போதுதான், பழைய பதிகம் நினைவிற்கு வந்தது, உனக்குக் கூற முற்பட்டேன்.

பெரியாரைக்கூடக் கைது செய்கிறாரே, காமராஜர் என்று கோபம் வருகிறது — உடனே பதிகம்பாடப்படுகிறது-அதற்காக அவர் மீது கோபப்படுவது போக்கிரித்தனம். அது அவர் கடமை,

திராவிடர்களைச் சிறையில் தள்ளுகிறார் காமராஜர், ஏன்?

அது அவர் கடமை!

திராவிடர்களை அடிமைப் பிடியில் வைத்திருக்கும் வடநாட்டு ஆதிக்கத்தை ஒரு துளியும் காமராஜர் எதிர்க்க மறுக்கிறாரே, அது ஏன்?

அது அவர் நிலைமை!

இலங்கையில் தமிழர்கள் இம்சிக்கப்படுவது பற்றி, இதுவரையில் ஒருவார்த்தை ஏன் என்று காமராஜர் கேட்கவில்லையே அது ஏன்?

அது அவர் காட்டும் பொறுமை.

தேவிகுளம் பீர்மேடு தமிழருக்கு நிச்சயமாகக் கிடைத்திடச் செய்வேன் என்று வாக்களித்துவிட்டு, பிறகு பறிகொடுத்துவிட்டு, வாளாயிருக்கிறாரே, அது ஏன்?

அது அவருடைய நிலைமை!

சென்னை என்ற சீரழிவான பெயர் வேண்டாம், தமிழ்நாடு என்று பெயர் வைக்கக்கூடாதா, இது பெரியாருக்கும் பிரியமானதாயிற்றே, இதைக்கூடச் செய்யவில்லையே காமராஜர், அது ஏன்?

அது அவருடைய பதவியால் ஏற்பட்ட நிலைமை.

இப்போதெல்லாம் அவர் கோயில் கோயிலாகச் சென்று தரிசிக்கிறாரே, அவர் ஏதோ வீரதீரமிக்க சுயமரியாதைக்காரர் என்று பேசப்பட்டதே. இப்போது அவர் போக்கு இவ்விதம் இருக்கிறதே, அது ஏன்?

அது அவருடைய பக்தி அல்ல, யுக்தி!

காங்கிரஸ் கட்சியின் கஷ்ட திசையில் கண்ணெடுத்தும் பாராதிருந்தவர்களை எல்லாம் இப்போது கட்டிப்பிடித்திழுத்துக் கொஞ்சுகிறாரே. அது ஏன்?

அது அவருடைய இராஜதந்திரம்!

ஆகட்டும், பார்ப்போம், அதற்கென்ன, கவனிக்கிறேன், என்றே எப்போதும் எதற்கும் கூறிக்கொண்டு காலத்தை ஓட்டுகிறாரே, அது ஏன்?

அது அவருக்கு மாமந்திரம்.

இதுபோலத் தம்பி, காமராஜர் செய்கிற ஒவ்வொன்றுக்கும், செய்யத் தவறுகின்ற ஒவ்வொரு கட்டத்துக்கும், விளக்கம் கனிவுடன் தரப்படுகிறது. காரணம் என்ன? பதிகத்தைப் படி, தம்பி, பதிகத்தைப் படி!

இராமர் பட எரிப்பு சம்பந்தமாக ஏற்பட்ட நிலைமைக்காக மட்டுமே, நான் இதனை எழுதவில்லை. பொதுவாகவே, மெள்ள மெள்ள ஆனால் ஆபத்தளிக்கும் அளவுக்கு வளர்ந்துள்ள விசித்திரமானதோர் அரசியல் நிலைமையைக் குறித்தே இதனை எழுதுகிறேன்.

அதற்கும் காரணம், இங்கு இத்தகையதோர், 'பாசவலை' வீசப்பட்டு அதிலே திராவிடரில் சிலர் சிக்கிக்கொண்டதனால் சிந்தை நொந்து கிடந்திட்ட நிலையில் நான், நாளிதழ்களைப் பார்க்கும் போது, வேறோரிடத்தில், கொள்கைக்காக, கொண்ட திட்டத்துக்காக, பாசம் குறுக்கிட்டாலும், நேசக் கரம் நீட்டப் பட்டாலும், சொந்தம் பந்தம் பேசப்பட்டாலும், அடித்தாலும் அணைத்தாலும் அவரே எமது ஐயன்! என்ற போக்கிலே நடந்து கொள்ள மறுப்போர் உளர் என்பதைக் காண்கிறேன்; புன்னகையும் பெருமூச்சும் பிறக்கிறது.

திலகர் எனது மாபெருந் தலைவர்!

சிறுவனாக இருந்தபோது நான் அவரைக் காண ஓடியிருக்கிறேன்.

நாட்டு விடுதலை இயக்கத்தின் பிதா அவர்.

அவருக்கு நான் என் ஆழ்ந்த அஞ்சலியைச் செலுத்துகிறேன்.

நேரு பண்டிதர், உருக்கமாகத் திலகர் திருநாளில் இதுபோலப் பேசினார் — இலண்டனில்.

திலகரின் திருஉருவப் படத்தை அங்கு திறந்துவைத்து உலகின் பல்வேறு நாட்டுத் தலைவர்களும் கூடிய அவையிலே, திலகரின் பெருமையை எடுத்துக் கூறினார்.

நேரு பண்டிதருக்கு இன்று கிடைத்துள்ள செல்வாக்கு சாமான்யமானதல்ல.

அவருடைய பெயர் அறியாத பெரு நகர் இல்லை!

அவர் நேசம் விரும்பாத நாடு இல்லை!

புகழேணியின் உச்சியில் வீற்றிருக்கிறார்.

அடுத்த படிக்கட்டிலே இவர், அதற்கு அடுத்ததில், இன்னவர், என்று கூடச் சுட்டிக்காட்ட முடியாதபடி, தனியானதோர் பீடத்தில் அமர்ந்து கொலுவிருக்கிறார்.

அப்படிப்பட்டவர், திலகர் திருநாளில், அஞ்சலி செலுத்துகிறார் என்றால், திலகர் பிறந்த திருநாட்டவர் எத்துணைப்பெருமையும் பூரிப்பும் கொள்வர்.

மராட்டியம் முழுவதும், எமது நாட்டுப் பெரியவரை, நானிலம் புகழும் நேரு பண்டிதர், இத்துணை பக்தியுடன் பெருமைப்படுத்திப் பேசியது கேட்டு எமது உள்ளமெல்லாம் உவகை பொங்கி எழுகிறது என்றுதானே பேசுவர், மகிழ்வர்!

மகிழ்ச்சி அடையாமலில்லை, மராட்டியர்— ஆனால், அந்த மகிழ்ச்சியால் மயங்கி, பம்பாய் பறிபோகட்டும் என்று இருந்துவிடவில்லை.

பம்பாய் மராட்டியருக்குக் கிடைத்தாக வேண்டும்—அதனைத் தர மறுக்கும் நேருவை நாங்கள் ஏற்றுக்கொள்ளமாட்டோம் என்று இடிமுழக்கம் செய்கிறார்கள்.

நேரு — நம்மவரய்யா, நல்லவரய்யா,—என்கிறார்கள்.

பம்பாய் எமது நகரம் — என்றுதான் மராட்டியர் முழக்கமிடுகிறார்கள்.

நேரு — திலகர் பெருமானிடம் எவ்வளவு பக்தி விசுவாசம் காட்டி இலண்டனில் பேசினார், தெரியுமா என்று கேட்டுப் பாசவலை விரிக்கிறார்கள்.

பார்த்தோம்—படித்தோம்—மகிழ்ந்தோம்—நன்றி கூறுகிறோம் —ஆனால் பம்பாய் எமக்குக் கிடைத்தாகவேண்டும் என்றுதான் மராட்டியம் கூறுகிறது.

அடித்தாலும் அணைத்தாலும் அவரே எமது ஐயன்! — என்று அரசியலில் பதிகம பாடவில்லை.

நமக்குப் பாடம் புகட்டத்தக்கதாக அமைந்திருப்பது மராட்டிய மக்களின் போக்குமட்டுமல்ல.

திலகரின் பேரனுக்கு இல்லக்கிழத்தியாகியுள்ள அம்மையுமன்றோ, அரும்பாடம் புகட்டுகிறார்.

திலகரின் திருநாமம் வாழ்த்திவிட்டு அவர் திருஉருவப்படத்தை இலண்டன்மாநகரில் திறந்து வைத்துவிட்டு, இந்தச் செயல் கண்டு, சிந்தையில் மகிழ்வு கொண்டு, மன்னா வருக, மாவீரா வருக, அண்ணலே வருக! எமதருமைத் திலகரைப் போற்றிய ஏந்தலே வருக! என்றெல்லாம் குதூகலித்து அர்ச்சித்து, குறை மறந்து குளிர் முகம் காட்டி, கரும்பு மொழி பேசிடுவர் மராட்டிய மக்கள் —பம்பாய் குறித்து எழுந்த குமுறலும் கொந்தளிப்பும் இருந்த இடம் தெரியாது போயிருக்கும், பவனியும் பாராட்டும் மெத்தவும் சிறப்புற இருக்கும், பாசம் காட்டுவர், நேசம் கோருவர், என்றெல்லாம் நேரு பண்டிதர் மனப்பால் குடித்திருக்க வேண்டும் — புறு இளம்புகையில். எத்தனை எத்தனை தலைநகர்கள் வாழ்த்தி வரவேற்றன என்பது நித்த நித்தம் பத்தி பத்தியாக இதழ்களிலே, வெளி வந்ததே பார்த்திருபபரே மராட்டியர்; இலண்டனும் பாரிசும், கெயிரோவும் பிரியோனியும், டமாஸ்கசும் ஏதன்சும், அயரும் பிறவும் அளித்திட்ட உபசார வைபவமும், படமாகிப் பளிச்சிட்டனவே பாரா திருந்திருப்பரோ மராட்டியர்; இத்துணை விழா கண்டவர், வருகிறார்; அதிலும் திலகர் பெருமானுக்குத் தண்டனிட்டுவிட்டு வருகிறார்; எனவே, பம்பாய் கிடைத்தாலென்ன பறிபோனால்தானென்ன, பார் புகழும் பண்டிதரை நாமும் பாராட்டி வரவேற்போம், என்று மராட்டியர் புதுக்கோலம் கொள்வர், பாசவலையில் வீழ்வர் என்றெண்ணியபடிதான், புருவத்தை நெறித்திடாமல் புன்னகையை இழந்திடாமல், நேரு பண்டிதர் புனா வந்தார். அதே நாளில், தம்பி, பாசவலையில் வீழ்ந்து எமது உரிமையை இழந்திடவில்லை என்று அவரும் அகிலமும் உணரத் தக்க வகையில், திலகரின் பேரனுக்கு மனைவியாக வாய்த்துள்ள வனிதாமணி, பம்பாய் மராட்டியருக்கே என்பதற்காக நடந்துவரும் அறப்போரில் ஈடுபட்டு, சத்யாக்கிரகப் படையொன்றினுக்குத் தலைமைவகித்து நடாத்திச் சென்று, கைது ஆகியிருக்கிறார்.

அறப்போர்த் தலைமைக்கு திலகரின் குடும்பத்தில் ஓர் திருவிளக்கு!

அறப்போர் நடந்த இடம், நெஞ்சை அள்ளுவதாக அமைந்திருக்கிறது, திலகர் சிலைக்கு முன்புறம்.

நேருவின் தீர்ப்பு நேர்மையானதல்ல. மராட்டியரின் உரிமையை அழித்திட முனைந்துள்ள நேரு பண்டிதர், மாவீரர் என்று போற்றப்படலாம், மானிலம் முழுதும் அவர் நடந்து செல்லும் பாதையில் மலர் தூவி வரவேற்கப்பட

திருமணம்

தஞ்சை மாவட்டம் வானராங்குடி திரு. பெரியசாமி செல்வன் கனகராசனுக்கும் இளங்காடு திரு. தங்கப்பா செல்வி மீனாசுந்தரிக்கும் 18—6—56 காலை 8-மணிக்கு மணமகள் இல்லில் திரு. சுயம்பிரகாசம் பி. ஏ., பி. எல்., எம். எல், ஏ. அவர்களின் தலைமையில் திருமணம் சிறப்பாக நடந்தேறியது.

லாம், எனினும், எமக்கு அவர் இழைத்துள்ள மாபெரும் துரோகத்தை நாங்கள் மறவோம், பணிய மாட்டோம் என்று கூறி அறப்போர் நடத்துகிறார் திலகர் திருமனையின் திருவாட்டியார், அவர் அஞ்சாநெஞ்சுடன் நடாத்தும் அறப்போர் நடைபெறும் இடத்திலே, வீரத்தின் சின்னமாய், விடுதலை வேட்கையின் பேருருவாய், தியாகத் திருஉருவாய், திலகர்சிலை நிற்கிறது

"திலகரின் உருவச்சிலைக்கு சமீபத்தில், திலகரின் பேரனின் மனைவி இந்து திலகரின் தலைமையில் ஒரு ஸ்திரீ கோஷ்டி சத்யாக்கிரகம் செய்தது. இதையடுத்து மேலும் இரு ஸ்திரீகள் கோஷ்டியும் பல ஆண்களும் சத்யாக்கிரகம் செய்தனர்."

(சு. மித்திரன்)

பவனி நடத்தப்படுகிறது பண்டிதருக்கு; அதிகாரிகள் அச்சம் வெளியே தெரியாதவண்ணம் பாவனைகாட்ட மெத்தச் சிரமப்பட்டிருக்க வேண்டும், ஏனெனில் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி பம்பாயில் கூடியபோது கலாம் விளைந்தது தெரியுமல்லவா!

பண்டிதரின் பவனி நடந்து கொண்டிருக்கும்போது, **இந்து**, பம்பாய் மராட்டியருக்கே, என்று முழக்கமிடுகிறார்! பண்டித் நேருவுக்கு ஜே! என்று அல்ல!

கிளர்ச்சியை ஒடுக்க, சர்க்கார் உங்களைக் கைதுசெய்யக்கூடும்—தடியால் தாக்கக் கூடும் —; அப்போதும் நீங்கள் காமராஜர் ஆட்சி ஒழிக, என்று கூவக்கூடாது. அப்படிப்பட்ட நேரத்தில் ஏதாவது கூவத் தோன்றினால், ஆச்சாரியார் ஒழிக என்று வேண்டுமானால் முழக்கமிடுங்கள், ஆனால் மறந்தும் காமராஜர் ஆட்சி ஒழிக என்று கூவிவிடாதீர்கள்—காமராஜர் நம்மவர் ஆகவே நல்லவர்!—என்று இங்கு போதிக்கப்படுகிறது; அங்கு பூனாவில், பாசவலையில் வீழ்ந்து கொள்கையை இழந்துவிடமாட்டோம், பம்பாய் மராட்டியருக்கே என்று முழக்கமிட, அறப்போர் நடாத்த, சிறைப்பட, **இந்து** இருக்கிறார்! **அன்றுமட்டும், புனா நகரில் மட்டும் 678-தொண்டர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்!**

அடித்தாலும் அணைத்தாலும் அவரே எமது ஐயன் என்று கொள்ள, தேஷ்முக் காட்கில் போன்றாரின் மனம் மட்டுமல்ல, மராட்டியப் பாமரனின் மனமே ஒப்பவில்லை.

இந்திதான் தேசிய மொழியாகித் தீரும் — இதைத் தவிர்த்திட, தடுத்திட முடியாது — கூடாது. இதற்குத் தயாராகிவிடுங்கள்—தகராறுவேண்டாம். இதோ பாருங்கள், நாணயங்களிலேயே இந்தி பொறித்தாகிவிட்டது— என்று சிண்டுபிடித்திழுத்துக் குட்டுகிறது, டில்லி.

இராமர் பட எரிப்பும், இந்தி திணிப்பு தடுப்பு முறைக் கிளர்ச்சிதான் என்பதைப் பெரியார் கூறுகிறார்.

பெரியாரின் பேராதரவினை எந்த நிலைமையிலும் பெற்றிடும் வாய்ப்பினைப் பெற்றுள்ள காமராஜர், இந்தப் பிரச்னை குறித்து என்ன கருதுகிறார்? காமராஜர் நம்மவர், அவருக்கும் இந்த இந்திச் சனியன்பிடிக்காது; எதிர்க்கிறார்; என்று கூறி, 'பாசம்' கொள்ளத் தக்க விதத்திலா? இல்லை தம்பி, இல்லை. பொறுக்கு மணிகளை உதிர்க்கிறார்! இதிலென்ன வாதம் சமாதானம், இதுதான் தேசியத் திட்டம் என்று சுடச்சுடப் பேசுகிறார். இருந்தாலும், அவர் நம்மவர் ஆக்வே நல்லவர், என்று பாசவலையில் வீழ்ந்தோர் பேசுவது கேட்கிறோம்,

இந்தி ஒழிக, இந்தியைப் புகுத்தும் டில்லி அடியோடு ஒழிக! என்று பொறிபறக்க முழக்கமிட்டுவிட்டு, கனிவுடன் குழைந்த குரலிலாவது, இந்திக்கு உடந்தையாக இருக்கும் காமராஜர் திருந்துக. என்றாவது கூறக்கூடாதா, என்று இந்தப் பாழும் மனம் கேட்கிறது. கப்சிப், காமராஜருக்குச் சங்கடம் உண்டாக்கக்கூடாது, என்று கட்டளை பிறந்துவிடுகிறது.

இந்தி ஒழிப்புக்காக நாம் நமது கடமையைச் செய்வோம்.

இந்தி திணிப்புக்காக நமது காமராஜர் அவருடைய கடமையைச் செய்கிறார்.

நமது முயற்சி அவருடைய நடவடிக்கையால், முறிந்துவிடுகிறது என்பதாலே, நீங்கள் அவர்மீது கோபப்படாதீர்கள்; அவர் நம்மவர் ஆகவே நல்லவர்!—என்று வாதாடப்படுகிறது.

இந்தி ஒழியத்தான் வேண்டும். இந்தியப் பேரரசு முறை ஒழிந்தாக வேண்டும். ஆனால், இந்தி திணிப்புக்கும், இந்தியப் பேரரசு முறைக்கும் பக்கபலமாக இருக்கும் காமராஜர் ஆட்சிமீது மட்டும் 'தும்பு தூசு' விழப்படாது! என்கிறார்களே, தம்பி, இந்தப் போக்கை என்னாலே புரிந்துகொள்ளவே முடியவில்லை! உனக்குப் புரிகிறதா?

ஏன்? என்று கேட்டாலோ,

ராஜரத்தினம்

அப்பாதுரை

சுந்தரவடிவேலு

என்று ஏதேதோ பெயர்களைக் காட்டி இவர்கட்கெல்லாம் உத்தியோக உயர்வு தந்த உத்தமரையா எதிர்ப்பது? ஒரு துளி நன்றி காட்டும் போக்குமா தமிழா! தோழா! திராவிடா!! உனக்கு இல்லாமற் போய்விட்டது? என்று இடித்துக் கேட்கிறார்கள்.

இந்தப் பெரியவர்கள் ஏதோ இப்போது இவர்கள் வகிக்கும் வேலைகளுக்கு அருகதையே அற்றவர்கள் போலவும், ஆறேழு மந்திரி சபைகளின் போதெல்லாம் தவங்கிடந்து வரம் கிடைக்காமல் இவர்கள் தவியாய்த் தவித்தது போலவும், காமராஜர் இவர்களை எங்கோ கிடக்கிறார்களே பாவம் என்று இன்முகம் காட்டி, தூக்கி உயர உட்காரவைத்தது போலவும் பேசுவது இவர்களைமரியாதையாக நடத்தப்படுவதாகவே எனக்குத் தோன்றவில்லை.

செந்தாமரை

கொளத்தூர் (இடக்குநாடு) தோழர் கோதண்டன் அவர்கள் குழந்தைக்கு 26—7—56 அன்று தோழர் சி. என். அண்ணாதுரை அவர்களால், செந்தாமரை என்று பெயரிடப்பட்டது.

இவர்களுக்கெல்லாம் உத்யோகம் கொடுத்தார், கொடுத்தார், என்று பேசப் பேச, பொதுமக்கள் இவர்கள் இந்த உத்யோகங்களுக்கே தகுதி இல்லைபோலும், காமராஜர் தயவினலேமட்டுமே இவர்கள் இவ்வளவு பெரிய உத்தியோகம் பெற்ருர்கள்போலும் என்றெண்ணிக்கொள்ளக்கூட இடமளிக்கிறது. நான், உள்ளபடி அவர்கள்பால் சிறிது பச்சாதப்படுகிறேன். அவர்களுடைய 'பெயர்' காரணமற்ற முறையில், அடிக்கடி அடிபடுகிறது — ஒரு 'அரசியல் கூட்டு' விளக்கத்துக்காகவே இவர்களின் பெயர் பயன்படுத்தப்படுகிறது.

காமராஜர் செய்த இந்தக் காரியத்துக்காகவே, அவருடைய

வடநாட்டு ஆதிக்கத்துக்கு உடந்தையாக இருப்பது

இந்தி திணிப்புக்கு வழி செய்து கொடுப்பது.

தமிழ் உரிமையைக் குலைப்பவருக்கு துணைநிற்பது.

போன்ற போக்கை மறந்து, அவருடைய புகழ் பாடிட, மனம் இடம் தரவில்லை. பெம்மானின் பெருமை கேளாய் என்று பதிகம் பாடுகிருர்கள், நான் என்ன செய்வது.

தம்பி, மராட்டியருக்கு நேரு பண்டிதரின் சீரிய குணம், சிறந்த பண்பு, நாட்டுக்கு அவராற்றிய தொண்டு, ஞாலத்தில் அவருக்கு வளர்ந்து வரும் புகழ், இவை தெரியாமலில்லை — எனினும், பம்பாய் மராட்டியருக்கு என்று அவர்கள் கூருமலில்லை.

தேவிகுளம் பீர்மேடு தமிழருக்கு என்றுகூட நாம் முழக்கமிட முடியவில்லை — குளமாவது மேடாவது என்கிருர் குணவான், அவருடைய ஆட்சியை எதிர்க்க இந்தப் "பசங்கள்" கூப்பாடு போடுகிருர்கள்— தள்ளுங்கள் குப்பையிலே—தங்க மானவர் காமராஜர், — என்று பாசம் பேசப்படுகிறது.

உரிமையை இழக்கமாட்டோம்! மாபெருந் தலைவரே! எமது மண்டலம் வருகிறீர், இந்தச் சமயம் எமது மனப்போக்கை அறிந்துகொள்ளும்! பம்பாய் மராட்டியருக்கு என்பது எமது உரிமை முழக்கம்! இதை மறுக்கிறீர், உமது பேச்சை ஏற்கமறுக்கிருேம்! உமக்கு அளிக்கப்பட இருக்கும் வரவேற்பில் நாங்கள் கலந்துகொள்ளப் போவதில்லை. மராட்டியர் தொடுத்துள்ள அறப்போரில், நாங்கள் பணியாற்றுவது என்று தூளுரைக்கிருேம், அறிக! என்று புனு பலகலைக் கழக மாணவர்கள், நேருபண்டிதரின் விஜயத்தின் போது, முடங்கல் விடுத்தனர்.

நேருபண்டிதர் பேச வருகிருர், மராட்டிய மக்களே, நெருப்பென்று கருதுங்கள் அந்தக் கூட்டத்தை, அங்கு செல்லாதீர், கூடுவோம் வேறோர் இடத்தில், உரிமை முழக்கமிடுவோம், வாரீர் — என்று அழைப்பு விடுத்தனர், மராட்டிய விடுதலைக் கிளர்ச்சிக் குழுவினர்.

சாந்தம்சீலம் போதிப்பவர், சமர் தவிர்ப்பவர், சமரசத் தூதுவர் என்று நாடு பல கொண்டாடும் நேரு வருகிருர், மராட்டியத்திலே ஒருபுறம் மாணவர்கள் மடலனுப்பி உரிமை முழக்கமிடுகிருர்கள், மாதர் படை திரண்டெழுந்து சிறைக்கோட்டம் செல்கிறது, மக்களின் அணிவகுப்பு, வேறோர்பக்கம் காணப்படுகிறது.

நேரு பண்டிதரால், மராட்டியர் மீது பாசவலை வீசமுடியவில்லை.

பாசவலையில் வீழ்ந்திட மராட்டியம் மறுக்கிறது.

எப்படிப்பட்ட மராட்டியம் தெரியுமா, தம்பி! நேருவை, பொன்னர் மேனியனே! புவியாளப் பிறந்தவனே! மன்னு, மாணிக்கமே! மலர் தூவித் தொழுதிடுவோம்—என்று அன்புபொழிந்து வரவேற்ற மராட்டியம்தான்! எனினும், தங்கள் உரிமை மதிக்கப்படவில்லை என்று அறிந்ததும் அவர்கள் உள்ளம் குமுறுகிறது, பாசவலையை அறுத்தெறிந்துவிட்டு, போர்க்கோலம் பூண்டெழுகிருர்கள்.

அடித்தாலும் அணைத்தாலும், அவரன்றோ நமது ஐயன் என்று பாடி, மக்களின் உரிமை பறிபோகும் பாழ் நிலையை உண்டாக்காமலிருக்கும், அந்த உத்தமர்களை நெஞ்சில் நிறுத்தி, பாசம் குறுக்கிட்டாலும், நாம் நமது கொள்கை வெற்றிக்கான பாதையை இழந்துவிடாதிருக்கும் பயிற்சியில் வெற்றி பெற்ருக வேண்டும்.

உன்னுலே அது முடியும் என்று உறுதியாக நான் நம்புவதனுல் தான் யார் எவ்வழி சென்ருலும், நாம் கொள்கை வழி சென்ருக வேண்டும் என்பதிலே ஆர்வம் பெறுகிறேன்.

அன்பன்,



வாங்க! விற்க!!

உலகப் பிரசித்திபெற்றச் சீமான் ராஃபெல்லரைப்பற்றிக் கேள்விப்படாதோர் இருக்க முடியாது.

தன் மகன் வயதுக்கு வந்ததும், அவன்வசம்எல்லாப் பொறுப்புகளையும் ஒப்படைத்து, முதல் வேலையாக பிரபல பாங்கர் மார்கன் என்பவரிடம் வியாபார விஷயமாக அனுப்பினுர்.

பாங்குக்குப் போய் எவ்வளவு நேரம் காத்திருந்தும், மார்கன் இவரைத் திரும்பிப் பார்க்காமல் தன்னுடைய வேலைகளிலேயே மூழ்கியிருந்தார். எனினும், ஜான் (ராஃபெல்லர்) பொறுமை இழக்காமலிருந்தான். கடைசியில் பாங்கர் திடீரென்று திரும்பிப் பார்த்து, உடனே நினைவு வந்தவர்போல "ஏம்பா! ஏதோ சில சொத்துக்களை விற்கவேண்டுமென்று உன் அப்பா விரும்புகிருராமே. என்ன பணம் வேண்டுமாம்?" என்று மிகவும் அசிரத்தையாகக் கேட்கவே: ஜானும் சளைக்காமல். "ஐயா! எங்க அப்பா, எதையும் விற்க விரும்பவில்லை; அந்த அவசியமும் இல்லை. நீங்கள்தான் ஏதோ வாங்கவேண்டுமென்றீர்களாம். வருகிறேன்..." என்று கூறிவிட்டு உடனே வந்துவிட்டான். பாங்கருக்கு, முகத்திலறைந்ததுபோலாயிற்று! சில நாட்களுக்கெல்லாம் ராஃபல்லர் கூறிய விலைக்கே, பாங்கர் அந்தச் சொத்தை, வாங்கிக்கொண்டு விட்டார்.

உலக அரங்கில்

வட ஆபிரிகா

★

அண்மையில் விடுதலையடைந்த சின்னஞ்சிறு ஆபிரிக நாடுகளான டுனீஷியாவும், மொராக்கோவும், விரைவில், ஐக்கியநாடுகள் சபையில் உறுப்பினர்களாகப் போகின்றன. இவைகளுக்கு அருகில் இன்னும் விடுதலை பெருமல் அனுதினமும் பிரெஞ்சு சர்க்காருடன் போராடிக்கொண்டிருக்கும் நாடு **அல்ஜீரியாவாகும்!** இந்த வாரம் மட்டிலும், அங்கு 60-அல்ஜீரியர்கள் பிரெஞ்சுக்காரர்களால் சுட்டுக் கொல்லப்பட்டார்களாம். டுனீஷியாவும், மொராக்கோவும் சுதந்திரம்பெற்றதைக் கண்ணாரக் கண்டிருந்தும் பிரெஞ்சு சர்க்கார், ஏன் அல்ஜீரியாவின் **விஷயத்தில்** இப்படி அட்டகாசம் செய்கிறதோ? இதற்கு ஒரு முடிவு ஏற்படாவிடில்; இந்தோ சீனவில் பிரெஞ்சு சர்க்காருக்கு ஏற்பட்ட கதியே, வட ஆபிரிக்காவிலும் கிடைக்கும் என்பதில் ஐயமில்லை.

*

துருக்கி

★

மத்ய கிழக்கிலுள்ள இஸ்லாமிய நாடான துருக்கிக்கு, பாகிஸ்தான் குடியரசுத் தலைவர் இஸ்கந்தர் மிர்ஸா விருந்தினராகச் சென்றிருக்கிருர், இந்த கிழமை. இவரது விஜயத்தால், துருக்கிக்கும் பாகிஸ்தானுக்கு மிடையேயுள்ள நட்பு பலப்படுமென்ற அறிகுறி தெரிகிறது. சைப்ரஸ் தீவு, கிரீசுடன் சேரக்கூடாதென்று துருக்கி போர்க் கொடி தூக்கியிருப்பது யாவருக்கும் தெரியும். இதனை பாகிஸ்தானும் ஆதரித்து, "சைப்ரஸ் துருக்கியைச் சேர வேண்டியதே", என்று அறிக்கை விடுத்துள்ளது.

*

ஸ்வீடன்

★

1400 ஆண்டுகளுக்கு முந்திய தான் புத்தர் உருவச் சிலையொன்று, ஜூலை 17-ந் தேதி ஸ்டாக்கோமுக்கு அருகிலுள்ள ஒரு சிறு தீவில், பூமியிலிருந்து எடுக்கப்பட்டிருக்கிறது. பித்தளையால் செய்யப்பட்ட இச்சிலை, இந்தியக் கலை நுணுக்கத்துக்கு ஆதாரமாக உள்ளது. இதுபோல, ஐரோப்பாவில் இந்தியச் சிலைக்ள் கிடைப்பது, இத்துடன் இரண்டாவது தடவையாகும்.

*

பிரான்ஸ்

★

பிரஞ்சுக் கம்யூனிஸ்டுக் கட்சியின் பொதுச் செயலாளராக மீண்டும் **மாரிஸ் தோரெஸ்** என்பாரே தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிருர். இவர் ஸ்டாலின் மீது மிக்க பற்றுக் கொண்ட சீடர்களில் ஒருவர் ஆவார், ஸ்டாலினைப் பற்றி ரஸ்யாவில் ஏற்பட்டுள்ள புது கருத்தலைகள். கம்யூனிஸ்டு கட்சிக்கு ஒரு பலத்த அடியாகும் என்பது இவரது கருத்து. இதனல், இவரை மீண்டும் பொதுச் செயலாளர் ஆகாமற் செய்ய, ஏனைய தோழர்கள் மிக்க தீவிரமாக முனைந்தும் கடைசியில் இவரே வெற்றி பெற்ருர். இவர் தலைமையில் நடைபெற்ற கம்யூனிஸ்ட்டு மாநாட்டுக்கு ரஷ்யாவின் சார்பில் மைகேல்செளஸ்லாவ் என்பாரும் வந்து கலந்து கொண்டார்.

*

செஞ்சீன

★

செஞ்சீனவின் அரசுக் காரியங்களில் பலவித குறைகள் காணப்பட்டு வருவதாக, அண்மையில் ஒரு செய்தி வெளிவந்ததல்லவா? அது உண்மைதான் என்று மிகப் பெருந்தன்மையுடன் சீனப்பிரதமர் சூ-என்-லாய் அண்மையில் ஒப்புக் கொண்டிருக்கிருர்! இப்படிக் குறைகள் ஏற்படுவதற்குக் காரணம், ஏராளமான பொறுப்புக்களையும் அதிகாரங்களையும் மத்திய சர்க்கார் வகிப்பதுதானென்பதும், இதனைத் திருத்தியமைக்கத்தான் முயற்சிக்கப்போவதாகவும் அறிவித்துள்ளார். "அதிகாரங்கள் ஒரே இடத்தில் குவிவதால் பல காரியங்களை அப்போதைக்கப்போது உடனுடன் பைசல் செய்ய முடிவதில்லை. அதோடு மக்களுக்கு உற்சாகமூட்டுவதாகவும், அது அமைவதில்லை. இங்கிலையில், ஜனநாயகம் வளரவும் வழி ஏற்படுவதில்லை. ஆகவே, அதிகாரங்களை ஆங்காங்குள்ள மாகாணங்கள் முழுமைக்கும் பரவலாக இருக்கும்படிச் செய்யப் போகிறேன்" என்று ஜுன் 30ந்தேதி சீன மக்கள்சபைமுன் பேசும்போது தெரிவித்துள்ளார். இப்படிகுறைகளை உணர்ந்து திருத்திக்கொள்ளும் பண்பு இங்கே எங்கே உளது? எங்கெந்த அதிகாரம் தன் வசம் இல்லையோ அதையெல்லாம் குவித்துக்கொண்டேபோகிறதே டில்லி!

*

நாகநாடு

★

என்னதான் ஆனுலும் சரி, நாகர்களின் பிரிந்து போகும் ஏற்பாட்டைத் தாங்கள் ஒருபோதும் ஏற்றுக் கொள்ளப் போவதில்லை என்று இந்த வாரம் டில்லி பார்லிமெண்டில் உள்நாட்டு மந்திரி பண்டித பந்த் அறிவித்துள்ளார்! அவர் இவ்விதம் வெளியிடுவதற்கு முதல் நாள் நேரு பண்டிதர் பேசியபோது, தனக்கு நாகர்கள் மீது அபார ஆசை உண்டென்றும், அவர்கள் நலன்மீது தான் மிக்க அக்கரை செலுத்த விரும்புவதாகவும் தெரிவித்தார். அக்கரையும் ஆசையும், அங்கே வெடிகுண்டுகளாகவும் பிணக் குவியலாகவும் மாறிக் கொண்டுள்ளது அனுதினமும்! ஏராளமான நாகர்கள், இந்திய இராணுவத்தால் வேட்டையாடப் பட்டுக் கொண்டுள்ளார்கள்.

★

REGD. NO. M. 4642 போன் நெ. 15

பிரிட்டிஷ் பார்லிமெண்டு

இலண்டன்மாநகரில், ஜெர்மனியின் குண்டுகள் வீழ்ந்து அமர்க்களப்படுத்திக் கொண்டிருந்தபோது, 1941 மே மாதத்தில் ஓரிரவு, பார்லிமெண்டு கட்டிடங்கள் சேதத்துக்கு ஆளாயின; மக்கள சபைக் கட்டிடம் முழுவதும் நாசமாயிற்று. நல்லவேளையாக, அப்போது சபை நடந்து கொண்டில்லை! பலர், 'குண்டு வீழ்ந்ததும் நல்லதுதான், மிகப் புதிய மாடலில் பெரிதாகக் கட்டலாம்' என்று கருதினார்கள்; ஏனெனில் பழைய பார்லிமெண்டு கட்டிடம் மிகச் சிறியதாகவும், வசதிகளற்றதாகவும் இருந்தது. ஆனால், சர்ச்சில் மறுத்துவிட்டார், பழைய கட்டிடத்தைப் போலவே புதியதும் அமைக்கப்பட வேண்டுமென விரும்பினார்.

சபை பெரிதாயிருந்தால், வீண் பேச்சுக்கும், ஒவ்வொருவர் தத்தமது பேச்சுவன்மையைக் காட்டவும் பயன்படுமே ஒழிய, அரசாங்க அலுவல்களைக் கவனிக்காது; எவ்வளவுநெருக்கமாகவும் சின்னதாகவும் இருக்கிறதோ, அவ்வளவுக்கவ்வளவு பொறுப்புகளைக் கவனிப்பதில் ஊக்கமும் சிரத்தையும் ஏற்படும் என்றார்! உண்மைதானே, அதுவும்!! ஆகவே அவர் கூற்றுப்படி, 1950-ல் கட்டி முடிக்கப்பட்டதுதான் இப்போதிருக்கும் பார்லிமெண்டு கட்டிடம்.

இப்படித்தான் பேச வேண்டும், இதுதான் ஒழுங்கு என்று வரையறுக்க பிரிட்டனில் எவ்வித ஏற்பாடும், நூல்களில் எழுதி வலியுறுத்தப் படுவதில்லை. எனினும் வமிச பரம்பரையாக சில ஒழுங்கு முறைகளை வாய்வார்த்தையாகவே ஏற்றுக் கொண்டு இயங்கி வரும் 'அதிசயம்' அங்குதான் உண்டு. உலகிலேயேதாய்ப் பார்லிமெண்டு என்று கூறும் தகைமை பெற்றதல்லவா!! அந்தப் பெருமையைக் காப்பதில் ஒவ்வொரு உறுப்பினர்களும் சிரத்தை எடுக்கத் தவறுவதில்லை.

கேள்வி நேரம் என்பது, பிரிட்டிஷ் பார்லிமெண்டில் மிகமிக முக்கியமானதாகக் கருதப்படுகிறது. சபை நடைபெறும்போது ஒவ்வொரு திங்கட்கிழமையிலும் வியாழக் கிழமையிலும் இதற்காக ஒரு மணி நேரம் செலவழிக்கப்படும். சர்க்காருடைய போக்கையும், ஏற்படும் தவறுகளை இடித்துரைக்கவுமே, கேள்வி நேரம் பயன்படுத்தப்படுகிறது. தமது தவறுகளை ஏற்று அவைகளைத் திருத்திக்கொள்ளும் பண்பாடு, பிரிட்டனில் பின்பற்றப் படுவதால் இருதரப்பினரும் கேள்வி நேரத்தை மிக முக்கியமானதாக மதிக்கிறார்கள், அநீதிக்கு இழைக்கப்படும் ஆப்பு என இந்நேரம் கருதப்படுகிறது.

பார்லிமெண்டு கட்டிடத்தின் மற்றொரு மூலையில் பிரபுக்கள் சபை இருக்கிறது. இங்கிலாந்தில் பிரபுக் குலத்தைச் சேர்ந்தவர்களும், அத்தகுதியை மன்னரால் அளிக்கப்பெற்றவர்களும், அங்கே இடம் பெறுவர் - பாதிரிகளுக்கும் இங்கே இடம் உண்டு. மக்கள் சபையில் 625 பேர் என்றால் இங்கு 800 பேர் உண்டு! ஆனால் அவர்களில் 150 தான் சபைக்கு வருவார்களாம்!!

பார்லிமெண்டு மக்கள் சபை உறுப்பினர்கள் என்றதும், அவர் மிகப் பெரும் பணக்காரர்களாயிருப்பார்கள் என்ற எண்ணம் தான் பளிச்சிடும். சமீபத்தில் எடுக்கப்பட்ட புள்ளி விபரப்படி, ஒவ்வொரு உறுப்பினரும் உழைத்து தன்னையும் தன் குடும்பத்தையும் காப்பாற்றிக்கொள்ளும் கஷ்ட தசையிலிருப்பவர்கள்தான் என்று, "ரீடர்ஸ்டைஜஸ்ட்", எனும் ஏடு தெரிவிக்கிறது. பலர், மிகவும் இளைஞர்களே. போன தேர்தலில் கலந்து கொண்டவர்களில் பாதிப்பேர் 25 வயதையும் தாண்டாதவர்களாம்.

350 ஆண்டுகளுக்கு முன்பு கைபாக்ஸ் என்டான் பார்லிமெண்டுக்கு வெடி மருந்து வைத்ததை யொட்டி இப்போதும் ஒவ்வொரு முறை கூடும் போது இண்டு இடுக்கெல்லாம போய் பார்ப்பது 'வழக்கங்களில்' ஒன்றாகிவிட்டது! மன்னர் பரம்பரையினர், பார்லிமெண்டு பொதுச் சபைக்குள் வருவது கூடாதென்பதும் அனுசரிக்கப்பட்டு வருகிறது.

"பார்லிமெண்டு", எனும் ஆங்கிலச் சொல்லின் சரியான அர்த்தம் தெரியுமா? பேச்சு, என்பதுதான்!

★

காஞ்சீபுரம், 95, திருக்கச்சிநம்பி தெரு "திராவிடநாடு" அச்சகத்தில்
ஆசிரியர சி. என். அண்ணாதுரையால் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது.